Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்




மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 மாசி – 26 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 முஹர்ரம் 28 (10.03.2005) வியாழக்கிழமை இதழ்:161

மட்டக்களப்பில் தொடரும் வன்முறைகள்

## முஸ்லிம் ஓட்டோ சாரதி கடத்தப்பட்டு கொலை!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு – ஓட்டமாவடியிலிருந்து கடத்திச் செல்லப்பட்ட முஸ்லிம் ஓட்டோ சாரதி ஒருவரை – கஜுவத்தை இராணுவ முகாமுக்கு அண்மையிலுள்ள கிரிமிச்சையில் வைத்து ஆயுதபாணிகள் சுட்டுக்கொன்றனர்.

நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது –

அப்துல் ஹமீட் மொஹமட் ரஹீம் (வயது 24) என்ற ஓட்டோ சாரதியிடம் சென்ற இருவர், அவரது ஓட்டோவை நேற்றுமுன்தினம் மாலை வாகரைக்குச் செல்வதாகக் கூறி வாடகைக்கு அமர்த்தினர்.

வாகரை நோக்கி ஓட்டோ சென்றுகொண்டிருந்த சமயம் கஜுவத்தை முகாமுக்கு சற்றுத் தொலைவில் துப்பாக்கிதாரிகள் (12 ஆம் பக்கம் பார்க்க)

விண்ணாணம் விநாசியர்



கொழும்பு அரசியல்வாதிகளுக்கு பிளேன் கிலி பிடிச்சுட்டுது...!

## முஸ்லிம் சாரதி கொலை; பின்னணியில் இராணுவம்!

விடுதலைப் புலிகள் குற்றச்சாட்டு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு – வாகரைப் பிரதேசத்திலுள்ள கிரிமிச்சையில் முஸ்லிம் ஓட்டோ சாரதியான அப்துல் ஹமீட் மொஹமட் ரஹீம் சுட்டுக்கொல்லப் பட்ட சம்பவத்தின் பின்னணியில் இராணுவமே இருப்பதாக விடுதலைப் புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர். இது தொடர்பாக நேற்று மாலை விடுதலைப் புலிகளின் மட்டக் களப்பு – அம்பாறை மாவட்ட அரசியற்துறை வெளியிட்ட அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது –

கிரிமிச்சைப் பகுதியில் நேற்று முன்தினமிரவு இடம்பெற்றுள்ள சம்பவம் எமக்கு மிகுந்த அதிர்ச்சியை யும் வேதனையையும் தருகிறது. தமிழ் பேசும் சகல மக்களும் ஒற்றுமையாக இருந்த பொற்காலத்தை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டுமென இரு தரப்பும் முயற்சித்துக் (12 ஆம் பக்கம் பார்க்க)

# பொதுக்கட்டமைப்பு குறித்து விரைவில் உடன்படிக்கை!



## லண்டனில் பாலாவிடம் சொல்ஹெய்ம் தெரிவிப்பு

(லண்டன்)


சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகளை வழங்குவதற்கான பொதுக் கட்டமைப்பொன்றை உருவாக்குவது தொடர்பாக – இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் விரைவில் உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்குரிய சூழ்நிலை உருவாகுமென – நோர்வே வெளிவிவகார அமைச்சின் விசேட ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் –விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கத்திடம் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

லண்டனில் அன்ரன் பாலசிங்கத்தின் இல்லத்தில் நேற்று இரண்டு மணிநேரம் நடத்திய சந்திப்பின்போதே எரிக் சொல்ஹெய்ம் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது –

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலை, நீண்டகாலமாக சமாதானப் பேச்சு வார்த்தை இடம்பெறாமை தொடர்பாகவும்

(12 ஆம் பக்கம் பார்க்க)



சியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் அரசியல் குழுவை பீற்றர்ஸன் நாளை சந்திப்பு!

(கிளிநொச்சி)

ஐரோப்பிய நாடுகளுக்கான சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருக்கும் விடுதலைப் புலிகளின் உயர்மட்ட அரசியற் குழுவினர் – நாளை ஒஸ்லோவில் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சனைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளனர்.

நேற்று மாலை ஓமந்தையிலிருந்து ஹெலிகொப்டர் மூலம் பயணமான அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான உயர்மட்டக்குழுவினர் நோர்வே, சுவீடன், அயர்லாந்து, பின்லாந்து, நெதர்லாந்து, ஒஸ்ரியா, இத்தாலி ஆகிய நாடுகளுக்குச் செல்லவுள்ளனர்.

அங்கு சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலை, போர்நிறுத்த உடன்பாட்டுக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடி மற்றும் சுனாமி அனர்த்த புனர் நிர்மானத்துக்கான பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதில் அரசு காட்டிவரும் தாமதம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து ஐரோப்பிய நாடுகளின் அரசியல் தலைவர்களுக்கு விளக்கமளிக்கவே புலிகளின் உயர்மட்ட அரசியற்குழு அங்கு செல்கின்றது.



கிளிநொச்சியிலிருந்து நேற்று மாலை 3.30 மணிக்கு தரைவழியாக வவுனியாவுக்குச் சென்ற தமிழ்ச்செல்வன் தலைமையிலான இந்தக் குழுவினர்– அங்கிருந்து 5.45 மணிக்கு விமானப் படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டரில் கொழும்பு சென்றனர். சீரற்ற கால நிலை காரணமாகவே தரை வழி யாகச் சென்று வவுனியாவிலிருந்து இவர்கள் புறப்பட்டதாகத் தெரிய வருகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளிடமுள்ள விமானங்களால் கொழும்பின் அரைப் பகுதி அழியும்!

## எச்சரிக்கிறார் ரட்ணசிறி விக்கிரமநாயக்க

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருப்பதாகக் கூறப்படும் இரண்டு இலகு ரக விமானங்களை கொண்டு – கொழும்பின் அரைப் பகுதியை அழித்துவிடமுடியும் என பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

நேற்று பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்ற விசேட சந்திப்பின்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் அவர் – இந்த இரண்டு இலகுவிமானங்களும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு போர்நிறுத்த உடன்பாட்டுக்காலத்தின்போதே கிடைத்துள்ளன. குறிப்பிட்ட இரண்டு விமானங்களும் பகுதிகளாக கொண்டு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு – பெரிய ஊறணிப் பகுதியில் நேற்றிரவு 7.30 மணியளவில் இனந்தெரியாத ஆயுதபாணிகள் நடத்திய தாக்குதலில் ஒருவர் படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் மதுபான நிலையம் ஒன்றை நடத்திவரும் பெரிய ஊறணி செல்வநாயகம் வீதியைச் சேர்ந்த கிறிஸ்ரி ஞானசூரி– செல்லப்பிள்ளை (வயது 36) என்பவரே துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்தவராவார்.

நேற்றிரவு இவர் தனது வீட்டிற்கு சைக்கிளில் வந்துகொண்டிருந்தவேளை இவரைப் பின்தொடர்ந்து சைக்கிளில் வந்தோர் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com
எக்ஸ்போ எயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
Your friend in the skies...

# பேராசிரியர் மௌனகுருவின் அரங்கியல் ஆய்வு நூலுக்கு விருது

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் சி.மௌனகுருவின் அரங் கியல் ஆய்வு நூலுல் இந்த ஆண்டிற்கான சம்பந்தர் விருதுக்கு தெரிவாகியுள்ளது.

இலக்கியக் கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை நினைவாக ஈழத்தமிழ் முன்னோடிச் சிறுகதைப் படைப்பாளி சம்பந்தர் பெயரால் வருடாவருடம் இவ்விருது வழங்கப் பட்டு வருகின்றது.

மட்டக்களப்பு தமிழுக்குத்தந்த பல்துறை அறிஞர் மௌனகுருவாவார். ஆரம்ப வயதிலிருந்தே கலை நிகழ்ச்சிகளிலும் நாடகத்துறையிலும் மிகுந்த நாட்டம் கொண்டு விளங்கிய அவரைப் பேராசிரியர் சு.வித்தியானந்தன் புடம் போட்டு அரங்கியலுக்கு வழிகாட்டிகளில் ஒருவராகத் தந்தார். பேராதனைப் பல்கலைக்கழகக் காலத்தில் கர்ணன் போர், நொண்டி நாடகம், இராவணேசன், வாலிவதை ஆகியவற்றில் நடித்துத் தன்னைச் சிறந்த நடிகனாக அடையாளம் காட்டிக் கொண்டார். சடங்கிலிருந்து நாடகம் வரை தப்பி வந்த தாடி ஆடு மௌனகுருவின் மூன்று நாடகங்கள் பழையதும் புதியதும், சுவாமி விபுலானந்தர் காலமும் கருத்தும், சங்காரம் ஈழத்தமிழ் நாடக அரங்கு நடிப்பு முறைகள் பற்றிய எண்ணக் கருக்கள், கலை இலக்கியக் கட்டுரைகள், மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள் முதலான பல நூல்களின் ஆசிரியர் நவீன அரங்கியலில் மிக்க பரிச்சயமுடையவர். ஈழத்தின் மைல் கல்லாகக் கூடிய பல நாடகங்களை மேடையேற்றியுள்ளார். பதினாறுக்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதி வெளியிட்டுள்ளார். அவரது இலக்கியப் பணிகளைப் பாராட்டி இந்த ஆண்டிற்கான சம்பந்தர்விருது அவரது அரங்கியல் என்ற நூலுக்கு வழங்கப்படுகின்றது. எழுத்தாளர் சம்பந்தனின் மகள் திரிவேணி கஜன் அவ்விருதுக்கான பணப்பரிசை வழங்கி வருகின்றார். இம்மாதம் 20 ஆம் திகதி நடைபெற விருக்கும் விழாவில் இப்பரிசிலும் சான்றிதழும் வழங்கப்படவிருக்கின்றன.

# உதைபந்தாட்ட பயிற்சி நூல் வெளியீட்டு விழா

யாழ். மாவட்ட உதைபந்தாட்ட சங்கத் தலைவர் டேவிட் தம்பி ராஜா உதைபந்தாட்டப் பயிற்சி தொடர்பாக எழுதிய நூல், நேற்று பிற்பகல் 3.30 மணிக்கு யாழ் மத்திய கல்லூரி கேட்போர் கூடத்தில் மத்திய கல் லூரி அதிபர் லயன் கே. இராசதுரை தலைமையில் வெளியிட்டுவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ் மாவட்ட விளையாட்டுத் துறை உத்தியோகத்தர் றொகான் ஜெயசிங்கம், விளையாட்டுத்துறை அமைச்சின் முன்னாள் பணிப்பாளர் மரியதாஸ், யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவர் கப்டன் டி.ஏ. எம். குணசிங்க ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

இந்தநிகழ்வில் ஆசிரியகலாசாலை முன்னாள் உடற்கல்வி விரிவுரையாளர் ஜதுகுலசிங்கம் ஆய்வுரை நிகழ்த்தினார்.

நூலின் முதற் பிரதியை கப்டன் டி.ஏ.எம். குணசிங் கத்திடமிருந்து தொழிலதிபர் ஜீவா பெற்றுக் கொண்டார். இந்த நிகழ்வில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த விளையாட்டுத் துறை ஆர்வலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# அதிபர் பதவி வெற்றிடத்துக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(வலிகாமம்)

வலிகாமம் வலயத்துக்குட்பட்ட மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையின் அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் இலங்கை அதிபர் சேவை வகுப்பு 1 வகுப்பு 2.1 வகுப்பு 2.11 (பட்டதாரியாக இருக்க வேண்டும்) சேர்ந்தவர்களிடம் இருந்தும், இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 1, வகுப்பு 2.1, வகுப்பு 2.11 (பயிற்றப்பட்ட பட்டதாரி) சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

அத்துடன் உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலை, பண்ணாகம் வடக்கு அ.மி.த.க.பாடசாலை ஆகியவற்றின் அதிபர் பதவி வெற்றிடத்திற்கு இலங்கை அதிபர் சேவையைச்சேர்ந்தவர்களிடம் இருந்தும் இலங்கை ஆசிரிய சேவை வகுப்பு1, வகுப்பு 2.1, வகுப்பு 2.11ஐச் சேர்ந் தவர்களிடம் இருந்தும் விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன.

மாதிரி விண்ணப்பப்படிவத்தை வலயக் கல்வி அலுவலகத்தில் பார்வையிட்டு அதற்கமைய விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமது விண்ணப்பங்களை இம்மாதம் 21 ஆம் திகதிக்கு முன்னர் உரிய முறைப்படி வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

# முன்னோடிப் பரீட்சை

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை, க.பொ.த உயர் தரப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு வருடந்தோறும் நடத்தி வரும் இந்துநாகரிகம், இந்து சமயம் ஆகிய பாடங்களுக்கான முன்னோடிப் பரீட்சை எதிர்வரும் 14,15 ஆகிய இருதினங்களில் நடைபெறவுள்ளது.

முன்னோடிப் பரீட்சைக்கு விண்ணப்பித்த பாடசாலைகளுக்கு பரீட்சை தொடர்பான அறிவுறுத்தல் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் கடிதங்கள் கிடைக்காத பாடசாலை அதிபர்கள் பரீட்சை செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு தேர்வுச் செயலாளர் அறிவித்துள்ளார்.

# கால்நடை உற்பத்தி சுகாதார சேவைக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்கு விவசாய, கால்நடை, காணி, நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் திஸ்ஸவர்ண சூரியவினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய முறையில் தயாரித்து இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் பேராதனை – ஆணையாளர் நாயகத்துக்கு தத்தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களை கடந்த 4ஆம் திகதி வெளியான வர்த்தமானி அறிவித்தலில் பார்வையிடலாம். (100)

# திட்டமிடல் குழு கூட்டம்

வலி. கிழக்கு பிரதேச திட்டமிடல் குழுக்கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பிரதேச செயலர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்துக்கு திட்டமிடல் குழு அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கோப்பாய் பிரதேச செயலர் கேட்டுள்ளார். (90)

# ஆஸ்பத்திரி வீதி திருத்தும்பணி ஆரம்பம்

கண்டி வீதியை அண்டிய யாழ். ஆஸ்பத்திரி வீதிப்பகுதி திருத்தும் பணி நேற்று ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

மிகவும் மோசமான குன்றும் குழியுமாக காணப்பட்ட இவ்வீதியால் பயணிப்போர் பெரும் சிரமத்தை எதிர் நோக்கி வந்தனர்.

இந்த வீதியை திருத்துமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து இந்த வீதி திருத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# முப்பத்தைந்து லட்சம் பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் – கடந்த ஆண்டு யாழ். மாவட்ட செயலக விளையாட்டுத் துறைக்கு 35 லட்சம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந்த விளையாட்டு உபகரணங்கள் தற்போது யாழ். மாவட்ட செயலக விளையாட்டுத் துறைக்கு வழங்கப்பட்டுள்ளன.

இந்த விளையாட்டு உபகரணங்கள் அனைத்தும் யாழ். பிரதேச செயலகங்களின் ஊடாக யாழ். மாவட்டத்திலுள்ள பதிவு செய்யப்பட்ட அனைத்து விளையாட்டுக் கழகங்களுக்கும் யாழ். மாவட்ட விளையாட்டுப் பயிற்சி நிலையங்களுக்கும் வழங்குவதற்கான நடவடிக்கைகளை யாழ். மாவட்ட செயலக விளையாட்டுத்துறை மேற்கொண்டுள்ளது.

போரால் அழிவுகளைச் சந்தித்துள்ள யாழ். மாவட்டத்தில் துரித அபிவிருத்தி திட்டத்தின் – கீழ் யாழ். மாவட்ட விளையாட்டு துறையை அபிவிருத்தி செய்யும் நோக்குடனேயே இந்த விளையாட்டு உபகரணங்கள் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சேதுசமுத்திர திட்டம் குறித்து கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொழில்துறை மன்றத்தின் ஏற்பாட்டில் சேது சமுத்திரத் திட்டம் சம்பந்தமாகவும், சுனாமி பாதிப்புக்கள் பற்றியதுமான கருத்தரங்கு நேற்று மாலை தொழில் துறை மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் சேது சமுத்திரத் திட்டத்தால் ஏற்படும் பாதிப்புக்கள் சம்பந்தமாகவும் சுனாமியால் ஏற்பட்ட அழிவுகள் சம்பந்தமாகவும் விளக்கப்படங்களுடன் கருத்துரைகள் இடம் பெற்றன.

இதனை கொழும்பிலிருந்து வருகைதந்த ஓய்வுபெற்ற பேராதனை பல்கலைக்கழக பேராசிரியர் ரஞ்சித் கலபதி நெறிப்படுத்தி வழங்கினார்.

நேற்றைய இக்கருத்தரங்கில் திணைக்கள தலைவர்கள் மற்றும் கொழும்பிலிருந்து வருகை தந்த முக்கிய துறைசார் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இல்லமெய்வல்லுநர் போட்டி

இளவாலை புனித கென்றியரசர் கல்லூரியும், இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலயமும் இணைந்து நடத்தும் வருடாந்த இல்ல மெய்வல்லு நர் போட்டி நாளை மறுதினம் சனிக் கிழமை நண்பகல் 1.30 மணிக்கு இளவாலை கென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக்கல்வி அதிகாரி கே.தனபாலசிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.

போட்டியில் வெற்றி பெற்றோர்களுக்கான பரிசில்களை அருந்தவமலர் தனபாலசிங்கம் வழங்கிக் கௌரவிப்பார்.

# புவியியலாளன் நூல் வெளியீட்டு விழா

புவியியலாளன் 16ஆம் 17ஆம் இதழ் நேற்று யாழ்.பல்கலைக்கழக புவியியற்துறை மண்டபத்தில் வெளியிட்டுவைக்கப்பட்டது.

த.பிரதீபா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சமூகவியல், அரசறிவியல் துறைத்தலைவர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் நூலினை வெளியிட்டு வைத்தார். மதிப்பீட்டுரையை விவசாயபீட பீடாதிபதி பேராசிரியர் எஸ். இராசதுரை நிகழ்த்தினார்.

நூலின் முதல் பிரதியை சமூகவியல், அரசறிவியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கே. ரகுநாதன் பெற்றுக்கொண்டார்.


நாகம்ஸ் சுன்னாகம்
சரத்குமார், நமிதா, வடிவேலு, கபாலி நடித்த
ஏய்
(சி-3860)
கா.நே. 11.00, 3.00, 7.00, 10.00



மனோகரா திரையரங்கு
இளைய தளபதி விஜய், நதீஷா, ரவிகிருஷ்ணா நடித்த சு★க்★ர★ன் கா.நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30, (பு.நே)
மாறுபட்ட வேடங்களில் சூர்யா நடித்த மாயாவி 11 ஆம் திகதி முதல்
யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

நிறைஞ்சனாஸ் சங்கானை
ஜெயம் ரவி அசின் நதியா பிரகாஷ்ராஜ் நடித்த
M.குமரன் son of. மகாலட்சுமி
கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
(சி-3856) (சி-3858)

நாதன்ஸ் யாழ்ப்பாணம் குளிரூட்டப்பட்டது
சிவராத்திரி தினத்தை முன்னிட்டு 07.03.2005 முதல்
விஜய், சங்கவி, சுபலக்சுமி நடித்த கா.நே(பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30 12.00 3.00
நிலவே வா
பலருடைய பாராட்டுதலையும் பெற்ற இத்திரைப்படம் முதல்முதலாக இலங்கையில் திரையிடப்படுகின்றது.
(சி-3857)

ராஜா யாழ்ப்பாணம்
சிம்பு (இரு வேடம்), ஜோதிகா கவுண்டமணி நடித்த
மன்மதன்
(சி-3859)
கா.நே: 10.30, 2.30, 6.30 மட்டும்

DIPLOMA IN BUSINESS ENGLISH
BY TOP LECTURER
B.B.S
140,Temple Road, Jaffna
021-2225796

ENGLISH CAMP 2005
J/ VEMBADI GIRLS' HIGH SCHOOL
Date : 11th, 12th of March 2005.
Venue : School Main Hall.
Chief Guest : Mr.P.Vigneswaran, Zonal Director Of Education, Vallikamam Zone.
விளம்பர அனுசரணை நமது ஈழநாடு
English Union J/ V.H.S



## விண்ணப்பம் கோரல்

பின்வரும் வேலைத்திட்டங்களுக்கு கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனம் (றீடோ) விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

**நிலை**

1. உளவளப் பயிற்சியாளர்கள் கிளி/முல்லை
2. அலுவலகச் செயலர் ODW நிகழ்ச்சித்திட்டம் – கிளிநொச்சி மாவட்டம்.

**கல்வித் தகைமை**

உளவளப் பயிற்சிக்கான தொண்டர்கள்

- க.பொ.த.உயர்தர வகுப்பில் 3 பாடத்தில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.
- உளவளம் சார்பான முன் அனுபவம் விரும்பத்தக்கது.
- வயது எல்லை:- 21-26 ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**அலுவலகச் செயலர்**

- கணினி அறிவு
- பல்கலைக்கழக பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.
- ஆங்கில அறிவு

விண்ணப்ப முடிவு திகதி :- 15.03.2005 (செவ்வாய்க்கிழமை)

*விண்ணப்பங்கள் வந்துசேரவேண்டிய முகவரி:-*

இணைப்பாளர்,
REEROO
தலைமைப் பணிமனை,
கனகபுரம், கிளிநொச்சி.

(சி-3888)

# தப்பியோடிய படையினர் சட்டபூர்வமாக விலகுவதற்கு பொதுமன்னிப்பு வழங்க ஏற்பாடு!

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து விலகிச் சென்றவர்களைச் சட்டரீதியாக சேவையிலிருந்து விலக்குவதற்காக, நாடளாவிய ரீதியில் பொது மன்னிப்புக் காலம் ஒன்றை அறிவிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தப்பியோடிய படையினர் பலரிடமிருந்து கிடைத்த கோரிக்கைகளை அடுத்தே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக இராணுவத் தரப்புத் தெரிவித்துள்ளது.

இதுவரை 60,000 இற்கும் அதிமானோர் இராணுவத்திலிருந்து தப்பிச் ஓடியுள்ளளதாகவும் இவர்களில் ஏராளமானவர்கள் இதற்கு முன்னர் வழங் கப்பட்ட பொதுமன்னிப்புக் காலத் தின்போது - சட்ட ரீதியாக சேவை யிலிருந்து விலகிச்சென்றதாகவும் தெரிவித்த இராணுவப் பேச்சாளர், அடுத்த சில நாட்களுக்குள் இந்த பொதுமன்னிப் புக் காலத்தை அறி விக்கவுள்ளதாகத் தெரிவித்தார். (01)


## சிரேஷ்ட இராணுவ அதிகாரி விபத்தில் காயம்

(கொழும்பு)

கொழும்பில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற வாகன விபத்து ஒன்றில் இராணுவத்தைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரி ஒருவரும், பெண் சிப்பாய் ஒருவரும் படுகாயமுற்றதாகத் தெரியவருகிறது.

மருதானை - காமினி ஹோல் சுற்றுவட்டத்தில் திரும்பும்போதே இராணுவ வாகனம் விபத்தில் சிக்கியதாகத் தெரியவருகிறது.

இந்தச் சம்பவத்தில் இராணுவ கேணல் ஒருவரும், பெண் சிப்பாயும் கால்களில்படுகாயமுற்றதாகப்பொலிஸார் தெரிவித்தனர்.



மூன்று நாள் விஜயமாக இலங்கை வந்திருந்த ஐரோப்பிய யூனியனின் வெளிவிவகார ஆணையாளர் பெனிற்றா பெரேரோ நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு பாசிக்குடாவில் சுனாமியால் சேதமுற்ற பிரதேசங்களைப் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம்.

# சமஷ்டி முறையின்மூலமான தீர்வுக்கு 80 வீதமான மக்கள் ஆதரவளிப்பராம்

## ஜனாதிபதி சந்திரிகா கூறுகிறார்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறை மூலம் தீர்வு காண்பது தொடர்பாக பொது மக்களிடையே வாக்கெடுப்பு நடத்தப்பட்டால், எண்பது வீதமான மக்கள் அதற்கு ஆதரவளிப்பார்களென ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மகளிர் பிரிவினரால் நேற்று முன்தினம் கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் நடத்தப்பட்ட சர்வதேச பெண்கள் தின நிகழ்வில் -கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

போர்நிறுத்த ஒப்பந்தத்தின் மூலம் சமாதானத்தை அடையலாம். சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகியன விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்த மிகவும் ஆர்வமாக உள்ளன.

ஆனால், சிலர் இதில் தமக்கு விருப்பமில்லையெனக் கூறுகின்றனர். வடக்கு - கிழக்குப் பகுதி பிரச்சினைக்கு தீர்வு காணாமல், நாட்டில் எந்தவித அபிவிருத்தியையும் ஏற்படுத்த முடியாது.

எனினும், அவர்கள் போரிலும் வெல்லமாட்டார்கள் என்பது எமக்குத் தெரியும். எனவே, பொதுமக்களைக் கொல்வதன் மூலமோ, சண்டைகள் செய்வதன் மூலமோ இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாதென்பது தற்போது தெளிவாகத் தெரிகிறது.

கடந்த 11 வருடங்களாக அதிகாரப்பரவலாக்கத்தின் அவசியத்தை இரு பிரதான கட்சிகளுக்கும் எடுத்துரைத்தேன். நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் அதிகார பரவலாக்கம் அமைந்திருந்தது. கடந்த 11 வருட கால அரசியல் வாழ்க்கையின்போது இதனைப் புரிந்து கொண்டேன்.

இனப்பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டு, இதுவரை எத்தகைய மாற்று யோசனைகளும் முன்வைக்கப் [illegible]வில்லை.

நாட்டைத் துண்டாட தயாரில்லை. அனைத்து மக்களின் உரிமைகளையும் அங்கீரிக்கின்றோம். அவர்களின் கோரிக்கைகளுக்கு மிகக் கூடியளவு செவிசாய்த்து வருகிறோம்.

நாட்டைப் பிரிப்பதற்கான அவசியம் கிடையாது. அதிகாரப் பகிர்வு செய்யும்போது, அது செய்யப்படமாட்டாதுஎன்றும் அவர் தெரிவித்தார்.

# திருமலை - மகளிர்தின நிகழ்வு; படையினர் குழப்ப முயற்சி!

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் திருகோணமலையில் இடம்பெற்ற நிகழ்வில் - முறுகல் நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலை பெண்கள் மேம்பாட்டுப் பேரவையால் நடத்தப்பட்ட மகளிர் தின விழாவில் தமிழீழத் தேசியக் கொடி ஏற்றப்பட்டபோதே இந்த முறுகல் நிலை ஏற்பட்டது.

இராணுவத் தரப்பின் புகாரை அடுத்து - ஏற்றப்பட்ட கொடியை இறக்குமாறு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் கூறியபோதிலும், கொடி இறக்கப்படாமலே நிகழ்வுகள் அங்கு நடைபெற்றன.

இந்தக் கூட்டத்தில் திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கலந்துகொண்டு உரையாற்றுகையில் -

நாம் மிகத் தெளிவாகவும், மிகவும் பலமாகவும் இருக்கிறோம். சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். சந்தர்ப்பம் சரியாகக் கிடைக்கும் பட்சத்தில் அதனைச் செயற்படுத்துவதற்கு நாங்கள் தாயாராக இருக்கிறோம்.

இறுதி இலட்சியத்தை அடைவதே எமது குறிக்கோளாகும் என்று அவர் குறிப்பிட்டார்.

# திருமலை காணி ஆணையாளரின் பிணை மனு நிராகரிக்கப்பட்டது!

(திருகோமலை)

திருகோணமலை காணி ஆணையாளர் அலுவலகக் களஞ்சியத்திலிருந்து மின்பிறப்பாக்கிகள் காணாமற்போன சம்பவம் தொடர்பாகக் கைதான சந்தேகநபரான உதவிக் காணி ஆணையாளர் நிமால் திஸாநாயக்கவின் பிணை மனுவை திருகோணமலை மாவட்ட நீதிபதி நிராகரித்தார்.

இந்திய அரசாங்கத்தால் சுனாமி அனர்த்த நிவாரணமாக இந்த 12 மின்பிறப்பாக்கிகளும் வழங்கப்பட்டிருந்தன.

குறிப்பிட்ட மின்பிறப்பாக்கிகள் களஞ்சிய அறையிலிருந்து மர்மமான முறையில்காணாமற்போனமை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் உதவி காணி ஆணையாளர் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இவர் கைது செய்யப்பட்டு இரண்டாம் நாள் அநாமதேய தகவல் ஒன்றின்பேரில் களஞ்சிய அறைக் கட்டடத்துக்குப் பின்புறமாக விறகுகளுக்குள் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் இவை கண்டெடுக்கப்பட்டன.

இதனையடுத்துநேற்றுமுன்தினம் திருகோணமலைமாவட்ட நீதிமன்றத்தில் இவர் தன்னை பிணையில் விடுதலை செய்யக்கோரி மனு வொன்றைத் தாக்கல் செய்தார்.

நிவாரணப் பொருட்களை உயரதிகாரியொருவர் திருடியிருப்பது பாரதூரமான குற்றச்செயல் என, நீதிமன்றம் கருதுவதாகக் குறிப்பிட்டு, இவரது பிணை மனுவை நிராகரித்த நீதிபதி, எதிர்வரும் 18 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கு மாறு உத்தரவிட்டார்.

# முன்னாள் அமைச்சரின் மகன் மாத்தறையில் சுடப்பட்டு மரணம்

மாத்தறை திக்குவெல்லையில் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சர் எச்.ஆர்.பியசிறியின் மகன் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

திக்குவெல்லை, பெலியத்த வீதியிலுள்ள வீட்டில் வைத்துஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு இடம்பெற்ற இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்த முன்னாள் அமைச்சரின் மகன் எச்.ஆர்.அநுருத்த (வயது 32) - மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, நேற்று முன்தினம் அதிகாலை மரணமானார்.

இவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டாரா அல்லது தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டாரா என்பதுபற்றி உடனடியாகத் தெரியவரவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வெல்லை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சரத்சந்திர தலைமையில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. இந்தச் சம்பவம் நடைபெற்றவேளை வீட்டில் இவரது தந்தையும், தாயும் மட்டும் இருந்துள்ளனர்.

துப்பாக்கிச் சத்தம் கேட்டு வந்து பார்த்தபோது, அறையொன்றுக்குள் இரத்தவெள்ளத்தில் மகன் கிடந்ததாகப் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

அதேநேரம், சந்தேகத்துக்கிடமான எவரையும் தாம் காணவில்லை என்றும், யாரும் வந்ததற்கான அடையாளங்கள் கிடைக்கவில்லை என்றும், தற்கொலை செய்துகொள்ளும் அளவில் எந்தப் பிரச்சினையும் அவருக்கு இருக்கவில்லை என்றும் இறந்தவரின் பெற்றோர் பொலிஸாரிடம் தெரிவித்தனர்.

பொலிஸார் இந்த மர்ம மரணம் தொடர்பாக விசாரணைகளை ஆரம்பித்திருக்கின்றனர்.

# தனியார்துறை ஊழியருக்கு புதிய நஷ்டஈட்டுத் திட்டம்

தனியார் துறை ஊழியர்களுக்கான புதிய நஷ்டஈட்டுத் திட்டமொன்றை அரசு நடைமுறைப்படுத்த உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் திட்டம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் 15 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளதாக, தொழிலமைச்சர் அதாவுட செனவிரத்ன தெரிவித்தார்.

இந்தப் புதிய திட்டத்தின் கீழ் தொழிலாளி ஒருவர் நஷ்டஈட்டுத் தொகையின் கீழ் பன்னிரெண்டு லட்சம் ரூபாவைப் பெற்றுக்கொள்ள முடியும். அல்லது 48 மாத்கால சம்பளத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தத் திட்டம் குறித்து தொழில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில் -

உலகில் வேறு எந்த நாட்டிலும் தனியார்துறைஊழியர்களுக்கு வழங்கப்படாத அதிகூடிய நஷ்டஈட்டுத் தொகையை வரலாற்றில் முதன் முறையாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தத் திட்டத்தின் படி தனியார் துறையில் ஊழியரொருவர் 25 தொடக்கம் 34 வருடம் வரை பணி புரிந்திருந்தால், அவர் 12 லட்சம் ரூபாவையும் - அதற்கு மேலதிகமாக சம்பந்தப்பட்ட நிதியத்திலிருந்து 12 மாத சம்பளத்தையும் நஷ்டஈடாகப் பெறத் தகுதியுடையவராகிறார்.

இதன் கீழ் 1-5 வருடகாலம் பணிபுரிந்தவர்கள் 12 1/2 மாத சம்பளத்தையும், 6-14 வருடகாலம் பணிபுரிந்தோர் 13 1/2 மாத சம்பளத்தையும், 15-19 வருடகாலம் பணிபுரிந்தோர் 38 மாதகால சம்பளத்தையும், 20-24 வருடகாலம் பணிபுரிந்தோர் 43 மாதகால சம்பளத்தையும் நஷ்டஈடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

25-34 வருடகாலம் பணிபுரிந்த ஒருவர் 42 மாதகால சம்பளத்தையும், அதற்கு மேலதிகமாக தொழிலாளர் நிதியத்திலிருந்த மேலும் 12 மாதகால சம்பளத்தையும் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (தே)

# யுத்தம் வலிந்து திணிக்கப்பட்டால் அதை எதிர் கொள்வதற்கு தயார்!

## திருமலையில் எழிலன்

நாங்கள் தெளிவாகவும், பலத்துடனும் இருக்கிறோம். சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். யுத்தத்தை நாங்கள் விரும்பவில்லை. எங்கள் மீது யுத்தம் வலிந்து திணிக்கப்பட்டால், அதனை ஏற்றுக்கொள்வதற்கும் தயாராகவே இருக்கிறோம்.

சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்துவதில் நாங்கள் குறியாக இருக்கிறோம் என, திருகோணமலை மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறை பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட மகளிர் மேம்பாட்டுப் பேரவையினரின் சர்வதேச மகளிர்தின விழா நேற்று முன்தினம் இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்றபோது, அதில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கண்மணி இரத்தினவடி வேல் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - திருகோணமலைமாவட்ட மகளிர் அரசியற்துறைப்பொறுப்பாளர் காருண்யா தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். இங்கு சிறப்புரையாற்றிய எழிலன் தொடர்ந்து உரையாற்றுகையில் -

போர் வரக்கூடாது என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். இன்னொரு யுத்தம் இந்த நாட்டில் ஏற்பட்டால், இலங்கைத்தீவு சுடுகாடாகிவிடும். இதற்குச் சிங்கள மக்களுக்கு - சிங்கள அரசியல்வாதிகள் பதில் கூறியாக வேண்டும்.

ஆயுதங்களைத் தொடர்ந்து தாங்கி நிற்கும் நிர்ப்பந்தம் எமக்கு இல்லை. படையினருக்கோ அவர்கள் ஓய்வுபெறும் வரை ஆயுதங்களைத் தாங்கி நிற்கவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது.

நாங்கள் எமது மக்களின் விடுதலைக்காகவே ஆயுதங்களைத் தூக்கியவர்கள். எமக்கு விரைவாக மாற்றம் தேவை. விரைவாக போராடி தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டிய தேவைப்பாடு எமக்கு இருப்பதாலேயே, நாங்கள் போராட்டத்தின் பால் தள்ளப்பட்டோம்.

ஜனாதிபதி சந்திரிகாவும், ஜே.வி.பி.யினரும் இணைந்து எங்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். முன்னைய ஆட்சியாளர்கள் விட்ட தவறே - இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருக்கிறது. இதனை விரைவில் தீர்க்கப்போவதாக ஜனாதிபதி தெரிவிக்கும் போதெல்லாம் அதனை ஜே.வி.பி.யினர் எதிர்க்கும் நடைமுறையைத்தான் கொண்டிருக்கின்றனர். அவர்கள் தங்களுக்குள் ஒரு இணக்கப்பாட்டைக் கொண்டு, அதனை வெளியுலகுக்கு எதிர்க்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனர் என்று அவர் தனதுரையில் குறிப்பிட்டார்.

# மொஹாலி டெஸ்ட் போட்டித் தொடர்

# இந்தியா 184 ஓட்டங்கள் குவிப்பு



மொஹாலியில் இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான ரி.வி.எஸ் கிண்ண டெஸ்ட் போட்டித்தெடரில் முதல் போட்டியின் இரண்டாம் நாளான நேற்று இந்திய அணி 1 விக்கெட் இழப்புக்கு 184 ஓட்டங்களை எடுத்துள்ளது.

இரண்டாவது நாளான நேற்று இந்தியா முதல் இனிங்சை தொடங்க இருந்தது. ஆனால் மழைத் தூறல் காரணமாக போட்டி திட்டமிட்டபடி காலை 10 மணிக்கு தொடங்கவில்லை.

காலை 7.30 மணியளவில் மொஹாலியில் மழை பெய்ததனால். ஆடுகளத்தில் தண்ணீர் தேங்கியது. இதனால் போட்டி தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டது. மழை காரணமாக ஆடுகளம் முழுவதும் தார்பாயால் மூடப்பட்டது.

மதிய உணவு இடைவேளைக்கு பிறகாவது போட்டி தொடங்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தொடர்ந்து மழைத்தூறல் இருந் ததால் போட்டி தொடங்க முடியாத நிலை ஏற்பட்டது.


மழையால் போட்டி பாதிக்கப்பட்டதால் போட்டியை காண வந்த இந்திய - பாகிஸ்தான் ரசிகர்கள் மிகவும் ஏமாற்றம் அடைந்தனர்.

பிற்பகல் 1.30 மணியளவில் மழை நின்றது. இதைத் தொடர்ந்து ஆடுகளத்தைப் பார்வையிட்ட நடுவர்கள் பிற்பகல் 2.20 மணிக்கு போட்டி தொடங்கும் என்று அறிவித்தனர்.

அதன்படி 2.20 மணிக்குப் போட்டி தொடங்கியது. ஷேவாக்கும் காம்பீரும் தொடக்க வீரர்களாகக் களமிறங்கினார்கள். இருவரும் தொடக்கம் முதல் ஒருநாள் போட்டிபோல் அதிரடியாக விளையாடி ஓட்டங்களைச் சேர்த்தனர். குறிப்பாக ஷேவாக் அதிரடியாக விளையாடினார். இதனால் இந்தியா 8.3 ஓவரில் 50 ஓட்டங்களைத் தொட்டது. அதனைத் தொடர்ந்து ஷேவாக் 49 பந்துகளில் அரைச்சதம் அடித்தார். இதில் 7 பவுண்டரிகளும் ஒரு சிக்ஸரும் அடங்கும்.

இருவரும் சிறப்பாக விளையாடினார்கள். இதனால் இந்தியா 15.5 ஓவரில் 100 ஓட்டங்களைத்தொட்டது. இந்திய அணியின் ஸ்கோர் 113 ஓட்டங்களாக இருக்கும்போது, கனேரியா பந்தில் கௌதம் காம்பீர் 41 ஓட்டங்கள் எடுத்திருக்கும்போது, நவீட் உல் ஹசனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அவர் 46 பந்துகளில் 7 பவுண்டரிகள் அடங்கலாக இந்த ஓட்டங்களை எடுத்தார்.


அடுத்து ராவிட் களமிறங்கினார். ஷேவாக்கும், ராவிட்டும் விக்கெட் இழக்காமல் நிதானமாக விளையாடினர். இந்தியா 40 ஓவரில் 184 ஓட்டங்கள் இருக்கும்போது, வெளிச்சம்



இல்லாத காரணத்தால் 2வது நாள் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்டநேர முடிவில் ஷேவாக் 95 ஓட்டங்களுடனும் ராவிட் 39 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

## சதுரங்கப் புதிர்



**இன்றைய கேள்வி:**

Black to Play and mate in two moves. *(விடை நாளை)*

**நேற்றைய கேள்விக்கான விடை:**

1. $qh_4$ + 2. $kf_1$ $Bxh_3$ வெள்ளையினால் Bishop இனை வெட்டியெடுக்க முடியாது. ஏனெனில் $f_2$ இல் Check mate தாக்குதல் உள்ளது.

**தொகுப்பு - சி. வித்தியாதரன்.**

## விளையாட்டு

# பொன் அணிகளின் போர் நாளை ஆரம்பம்


சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான 88ஆவது வருட கிரிக்கெட் போட்டி நாளையும் நாளை மறுதினமும் வட்டுக் கோட்டை யாழ்ப் பாணக் கல்லூரி பிக்னெல் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பொன்அணிகளின் மோதல் (Battle of the Golds) என அழைக்கப்படும் இப்போட்டி இரு தினங்களும் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும். இவ்வருடம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கு ஜே.சுரேனும், யாழ்ப்பாணக்கல்லூரி அணிக்கு எஸ்.தனாரனும் தலைமை தாங்கு கின்றனர்.

இதுவரை ஆண்டுகளும் நடைபெற்ற போட்டிகளில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி 29 தடவைகளும், யாழ்ப்பாணக் கல்லூரி 15 தடவைகளும் வெற்றிபெற்றுள்ளன. 24 போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளன. மிகுதிக்கான விபரங்கள் கிடைக்கப் பெறவில்லை.


இவ்வாண்டு சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி பங்கு பற்றிய போட்டிகளில் மூன்று போட்டிகளில் வெற்றிபெற்றது. மூன்று போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தன. இரண்டு போட்டிகள் தவிர்க்க முடியாத காரணங்களால் கைவிடப் பட்டன. யாழ்ப்பாணக் கல்லூரி பங்குபற்றிய போட்டிகளில் ஒன்றில் வெற்றியும் மூன்று போட்டிகளில் தோல்வியும் இரண்டு போட்டிகள் வெற்றிதோல்வியின்றியும் முடிவடைந்தன.

இரண்டு அணிகளும் சிறப்பான விளையாட்டு வீரர்களைக் கொண்டுள்ளன. கடந்த ஆறு ஆண்டுகளாக பொன் அணிகள் மோதலில் தொடர்ந்து வெற்றி கொண்டுவரும் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி இவ்வருடம் வெற்றியைத் தக்கவைத்துக் கொள்ளுமா என்பது யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கு பெரும் சவாலாக உள்ளது.



யாழ்ப்பாணக் கல்லூரி வீரர்கள்

| | | |
|---|---|---|
| 1. தனாரன் | - | (கப்டன்) வலது கை நடுத்தர வரிசை துடுப்பாட்ட வீரர், இடதுகை நடுத்தர வேக ஆரம்ப பந்து வீச்சாளர், சிறந்த களத் தடுப்பாளர் மானிப்பாய் இந்து அணிக்கு எதிராக 15 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். |
| 2. என்.நிருபரன் | - | (துணைக் கப்டன்) வலதுகை நடுத்தர வரிசை துடுப்பாட்ட வீரர் அதிகபட்சமாக கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு எதிராக 99 ஓட்டங்களும், மத்திய கல்லூரிக்கு எதிராக 56 ஓட்டங்களும் எடுத்தவர். |
| 3. கே.பெரியதம்பி | - | இடதுகை துடுப்பாட்ட வீரரும் சிறந்த களத்தடுப்பாளரும். |
| 4. கே.செந்தூரன் | - | இடதுகை நடுத்தரவரிசை துடுப்பாட்ட வீரரும், வலதுகை சுழற்பந்து வீச்சாளரும். |
| 5. ஆர்.பாலு | - | வலதுகை துடுப்பாட்ட வீரரும், சிறந்த களத்தடுப்பாளரும், வலதுகைப் பந்துவீச்சாளரும். |
| 6. என்.ஜனார்த்தனன் | - | வலதுகை ஆரம்பப் பந்துவீச்சாளர், வலதுகைத் துடுப்பாட்ட வீரர், சிறந்த களத்தடுப்பாளர், கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கு எதிராக பதினைந்து ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை வீழ்த்தியவர். |
| 7. கே.சிவப்பிரகாசம் | - | வலதுகைத் துடுப்பாட்ட வீரரும், சிறந்த களத்தடுப்பாளரும், சிறந்த பந்துவீச்சாளரும். |
| 8. ரி.பெரியதரன் | - | வலதுகைத் துடுப்பாட்ட வீரரும், வலதுகைப் பந்துவீச்சாளரும். |
| 9. என்.சசிதரன் | - | வலதுகைத் துடுப்பாட்ட வீரரும், வலதுகை சுழற்பந்து வீச்சாளரும். |
| 10. என்.ரூபதாசன் | - | வலதுகை துடுப்பாட்ட வீரர். |
| 11. கே.ஜே.டிசான் | - | வலதுகைத் துடுப்பாட்ட வீரர். |
| 12. ஆர்.மயூரன் | - | விக்கெட் காப்பாளர். |
| 13. எஸ்.யதுசன் | - | சகலதுறை ஆட்டக்காரர், வலதுகை ஆரம்ப துடுப்பாட்ட வீரர், மாற்றத்தை ஏற்படுத்தவல்ல பந்துவீச்சாளர். |
| 14. வி.ஜோல் ஷேமன் | - | வலதுகைத் துடுப்பாட்ட வீரரும், சிறந்த களத்தடுப்பாளரும், வலதுகை சுழற்பந்து வீச்சாளரும். |
| 15. வை.சுதர்சனன் | - | வலதுகைத் துடுப்பாட்ட வீரர். |
| 16. எஸ்.சுதர்சன் | - | வலதுகைத் துடுப்பாட்ட வீரர். |
| 17. பி.செந்தூரன் | - | வலதுகை பந்துவீச்சாளர். |



சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி

| | | |
|---|---|---|
| 1. ஜே.சுரேன் | - | (கப்டன்) வலதுகை ஆரம்ப மத்திம வேகப்பந்து வீச்சாளர். வலதுகை துடுப்பாட்ட வீரர். அதிகூடிய ஓட்ட எண்ணிக்கை 90 எதிர் யூனியன் கல்லூரி. |
| 2. எ.ஜே.வின்சன் | - | (துணைக் கப்டன்) வலதுகை துடுப்பாட்ட வீரர். பிரயோசனமான மாற்றுப் பந்து வீச்சாளர், அதிகூடிய ஓட்ட எண்ணிக்கை ஆட்டமிழக்காமல் 66 எதிர் யூனியன் கல்லூரி. |
| 3. வி.விதுபாலா | - | இடதுகை சுழற்பந்து வீச்சாளர். |
| 4. ரி.சுயந்தன் | - | சிறந்த சகலதுறை ஆட்டக்காரர். திறமையான பந்து வீச்சாளர் அதிகூடிய ஓட்ட எண்ணிக்கை 52 எதிர் கொக்குவில் இந்துக்கல்லூரி. |
| 5. வி.ஜே.லூட்சன் | - | சகலதுறை ஆட்டக்காரர் வலதுகை மத்தியவரிசை துடுப்பாட்ட வீரர் திருப்பு முனையை ஏற்படுத்தக் கூடிய மாற்றுப்பந்து வீச்சாளர். அதிகூடிய ஓட்ட எண்ணிக்கை ஆட்டமிழக்காமல் 62 எதிர் கனகரத்தினம் ம.ம.வி. |
| 6. எஸ்.ஜெனன்ராஜ் | - | வலதுகை ஆரம்ப துடுப்பாட்ட வீரர் அதிரடி ஆட்டக்காரர். |
| 7. ஜே.ஜதீஸ்வரன் | - | விக்கெட் காப்பாளர், துடுப்பாட்ட வீரர். |
| 8. எ.ஜெயந்திரம் | - | வலதுகை ஆரம்ப துடுப்பாட்ட வீரர். |
| 9. பி.பத்மமுரளி | - | திறமையான களத்தடுப்பாளர், பயனுள்ள வலதுகை சுழற் பந்துவீச்சாளர், தாக்கமான வலதுகை துடுப்பாட்ட வீரர். |
| 10. ஐ.ஜக்சன் | - | அறிமுக வீரர் . சதமடித்தவர். சகலதுறை ஆட்டக்காரர். இடதுகை மத்திய வரிசை துடுப்பாட்ட வீரர். அணியின் நம்பிக்கை நட்சத்திரம் என அழைக்கப்படுபவர். வலதுகை மத்திய வேகப் பந்துவீச்சாளர். அதிகூடிய எண்ணிக்கையாக ஆட்டமிழக்காமல் 101 ஓட்டங்களை யாழ்.இந்துக்கல்லூரிக்கு எதிராகப் பெற்றவர். |
| 11. ஜே.அருண் | - | அறிமுக வீரர். வலதுகை துடுப்பாட்ட வீரர். வலது இடது கையினால் பந்து வீசக்கூடிய ஆற்றலுடையவர். |
| 12. ஜே.கொலின் | - | அறிமுகவீரர் வலதுகை மத்திம வேகப்பந்துவீச்சாளர். சிறந்த வலதுகை துடுப்பாட்ட வீரர். |
| 13. ஜீனத்ராஜ் | - | அறிமுக வீரர், வலதுகை ஆரம்ப மத்திம வேகப்பந்து வீச்சாளர், வலதுகை துடுப்பாட்ட வீரர். |
| 14. பி.ரஜீவ் | - | அறிமுக வீரர், வலதுகை துடுப்பாட்ட வீரர், பின்நிலை களத்தடுப்பாளர். |
| 15. ஏ.மரீன்குமார் | - | அறிமுக வீரர், வலதுகை சுழற்பந்து வீச்சாளர், வலதுகை துடுப்பாட்ட வீரர். |
| 16. எஸ்.மிலான்டோ கிறிஸ்ரோ | - | அறிமுக வீரர், குழந்தை நட்சத்திரம், முன்னிலைக் களத்தடுப்பாளர். |

# சுனாமியால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளுக்கு யுனிசெப் உதவியுடன் தற்காலிக கொட்டகைகள்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தின்போது, வடமராட்சிப் பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட பாடசாலைகளில் யுனிசெவ் நிறுவனம் 22 தற்காலிக வகுப்பறைகளை அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளது.

ஆழியவளை சீ.சீ.த.க பாடசாலைக்கு மூன்றும், வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்துக்கு மூன்றும், வெற்றிலைக்கேணி றோ.க.த.க பாடசாலைக்கு ஒன்றும், கட்டைக்காடு றோ.க.த.க பாடசாலைக்கு இரண்டும், கேவில் அ.த.க பாடசாலைக்கு இரண்டும், மாமுனை அ.த.க பாட சாலைக்கு ஒன்றும், செம்பியன்பற்று றோ.க. த.க பாடசாலைக்கு ஒன்றும், தாழையடி றோ.க.த.க பாடசாலைக்கு இரண்டும், மணற்காடு றோ.க.த.க பாடசாலைக்கு மூன்றுமாக 18 தற்காலிக வகுப்பறைகள் அமைப்பதற்கான நடவடிக்கைகளை வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களப் பணிப்பாளர் மேற்கொண்டு வருகிறார்.

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் மேற்குறிப்பிட்ட பாடசாலைகளின் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் தனியார் வீடுகளிலும், மரநிழல்களிலும் நடைபெற்று வருகின்றன.

வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில் வல்வை `சிவகுரு வித்தியாலயம், வட இந்து மகளிர் கல்லூரி, தம்பசிட்டி மெ.மி.த.க பாடசாலை, அல்வாய் மெ.மி.த.க பாடசாலை ஆகியவற்றுக்கும் ஏழு தற்காலிக வகுப்பறைகளை யுனிசெப் நிறுவனம் அமைத்துக் கொடுக்கவுள்ளது. (21)

## திட்டமிடல் குழுக்கூட்டம்

வலி. கிழக்கு பிரதேச திட்டமிடல் குழுக்கூட்டம் நாளை காலை 10.00 மணிக்கு பிரதேச செயலர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்துக்கு திட்டமிடல் குழு அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கோப்பாய் பிரதேச செயலர் கேட்டுள்ளார். (90)

# உயர்பாதுகாப்பு வலயத்தில் மீள்குடியமர படையினர் எதிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் இராணுவத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள உயர்பாதுகாப்பு வலயக் காணி உரிமையாளர்கள் இடம்பெயர்ந்து வாழ்ந்துவரும் நிலையில், அவர்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியேற அனுமதிக்குமாறு கோரிய போதிலும் – அதற்கு இராணுவம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

படையினரின் இந்த எதிர்ப்பை சட்ட மா அதிபர் கமலசபேசன் உயர்நீதிமன்றுக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

உயர்பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக்குடியமர்த்துவது, தமது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைந்துவிடுமென இராணுவம் தெரிவித்துள்ளது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா மற்றும் பலாலியைச் சேர்ந்த விவசாயி எஸ்.இராசதுரை ஆகியோர் உயர்பாதுகாப்பு வலய பகுதிகளிலுள்ள தமது காணிகளில், படையினர் தம்மை மீள்குடியமர அனுமதிக்காமை, அடிப்படை மனித உரிமை மீறலெனத் தெரிவித்து ,நீதிமன்றில் வழக்குத் தொடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, உயர்பாதுகாப்பு வலயம் தவிர்ந்த பகுதிகளில் – மக்கள் மீளக்குடியமர விரும்பினால், அரசாங்கம் அதற்கு உடன்படுமெனவும் சட்ட மா அதிபர் தெரிவித்துள்ளார்.

# கடற்பொறியியலாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(மானிப்பாய்)

கடற்தொழில், நீரியல்வள அமைச்சின் கீழ் இயங்கும் கடற்தொழில், நீரியல் வளத்துறைத் திணைக்களத்தின் கடற் பொறியியலாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை உரிய முறையில் தயாரித்து, விண்ணப்பதாரிகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர், கடற்தொழில், நீரியல் வளத்துறைத் திணைக்களம், புதிய செயலகக் கட்ட டம், மாளிகாவத்தை, கொழும்பு – 10 என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

இதன் மேலதிக விபரங்களை கடந்த 04.03.05 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பார்வையிடலாம். (100)

# அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் நடத்திய மகளிர் தின நிகழ்வு!

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் பெண்கள் அபிவிருத்தி திட்டப்பிரிவு 20 மாதர் சங்கங்கள் மாதர் குழுக்களுடன் இணைந்து நடத்திய 'பால்நிலை சமத்துவம் பேணுவோம்' நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் 'பெண்களும் தலைமைத்துவமும் – ஒரு வரலாறு' எனும் தலைப்பில், யாழ். பல்கலைக்கழகத் தமிழ்துறை விரிவுரையாளர் மனோன்மணி சண்முகதாஸ் உரை நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் தவில், நாதஸ்வர பெண் கலைஞர்கள் வழங்கிய நாதஸ்வர கச்சேரி இடம்பெற்றது. தொடர்ந்து 'சமாதான செயல்முறைகளில் பெண்களின் பங்கு' எனும் தலைப்பில் பெண்கள் அபிவிருத்தி நிலையத் தலைவர் சறோஜா சிவச்சந்திரன் உரை நிகழ்த்தினர்.

தொடர்ந்து தே.தேவானந்தின் நெறியாள்கையில் உருவான 'பூச்சிகள் அரிக்கும் கண் இமைகள்' நாடகம் இடம்பெற்றது.

'சமூக மீள் கட்டமைப்பில் பெண்கள்' எனும் தலைப்பில் – யாழ். பல்கலைக்கழக சமூகவியற்துறை விரிவுரையாளர் டொறின் அருளானந்தமும், 'வாழ்க்கை போராட்டத்தில் பெண்கள்' எனும் தலைப்பில் – மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் யோ.கலைவிழியும், ஐ.நா. அபிவிருத்தி நிதியத்தை சேர்ந்த கே. நின்கே ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

## அரசாங்க சிற்றூழியர்களை

# எழுதுநர், தட்டெழுத்தாளர்களாக பதவியுயர்த்துவதற்கான பரீட்சை

(மானிப்பாய்)

அரசாங்க சேவையின் சிற்றூழியர்களைப் பொது எழுதுநர் சேவை மற்றும் தட்டெழுத்தாளர் சேவையின் II 'ஆ' பிரிவுக்கு நியமனம் வழங்கும் பொருட்டு, 2003/2004 ஆம் ஆண்டுக்காக நடத்தப்படும் போட்டிப்பரீட்சைக்காக விண்ணப்பங்கள் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஜயம்பதி பீ.ஹெட்டியாராய்ச்சியால் கோரப்பட்டுள்ளது.

இந்த விண்ணப்பங்களைப் பரீட்சார்த்திகள் தம் சொந்தக் கையெழுத்தில் சரியாகவும்,, தெளிவாகவும் நிரப்பி, எதிர்வரும் ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பரீட்சை ஆணையாளர் நாயகத்தைச் சென்றடையுமாறு தாம் சேவை புரியும் திணைக்களத் தலைவர்கள் ஊடாகப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. இந்தப் பரீட்சை யாழ்ப்பாணத்திலும் நடத்தப்படும்.

மேலதிக விபரங்களை கடந்த 04.03.05 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பார்வையிடலாம். (100)

# சின்னஞ்சிறு செய்திகள்

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கியூடெக் நிறுவனத்தின் விளான் பகுதி மக்கள் குழுவுக்கான முழு நாள் கருத்தரங்கு எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை – விளான் புனித அந்தோனியார் தேவாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் சுயதொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் வகையில், 'கால்நடை வளர்ப்பும் அதன் மகத்துவமும்' என்ற தலைப்பில் எஸ்.சுப்பிரமணியம் கருத்துரை வழங்கவுள்ளார். (91)

## உயர்தர மாணவர் ஒன்றுகூடல்

(சுதுமலை)

வைத்தீஸ்வராக் கல்லூரியின் உயர்தர மாணவர் ஒன்றிய வருடாந்த ஒன்றுகூடல் எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கல்லூரியின் விவேகானந்தர் மண்டபத்தில் மாணவர் ஒன்றியத் தலைவர் கலைபாகர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு யாழ். கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்ஷ.எஸ். தங்கராசா, திருமதி தங்கராசா, முன்னாள் சென்.சாள்ஸ் மகா வித்தியாலய அதிபர் திருமதி வி.எப்.சின்னத்துரை ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (91)

## கிராமிய கைத்தொழிலாளர் விபரம் திரட்டல்

சிறிய கிராமியக் கைத்தொழிலாளர் தொடர்பான விபரங்களை விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டு, கோப்பாய் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள பகுதிகளில் பிரதேச செயலகம் ஊடாக சிறிய கிராமிய கைத்தொழில் அமைச்சு, கைத்தொழில்களைப் பதிவுசெய்வதற்காக விபரங்களைத் திரட்டவுள்ளது.

விபரங்களைத் திரட்டும் நடவடிக்கை எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன் பட்டதாரி பயிலுநர்கள் ஊடாகத் திரட்டப்படவுள்ளதாக வலி.கிழக்குப் பிரதேச செயலர் தெரிவித்தார். (90)

## மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன

(பருத்தித்துறை)

சுனாமி அனர்த்தத்தின்போது மூக்குக்கண்ணாடிகளை இழந்த பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கு, கியூடெக் நிறுவனம் மூக்குக்கண்ணாடிகளை வழங்கியுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு மீளவும் கண் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு,முதற்கட்டமாக 108 பேருக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டதாக, கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்திரு ஜெயக்குமார் தெரிவித்தார். (91)

## குடியேற்றத் திட்டத்தில் வீடுகள் கையளிப்பு

(சுதுமலை)

சுனாமி அனர்த்தத்தால் வீடுகளை இழந்த வல்வெட்டித்துறை ஆதிகோவிலடி மக்களுக்கு, விராம்பத்தை சிறிமுருகன் குடியேற்றத் திட்டப் பகுதியில் முதற்கட்டமாக சேவாலங்கா நிறுவனம் தற்காலிக வீடுகளை அமைத்துக் கொடுத்துள்ளது.

கிராம அலுவலர் எஸ்.சிவபாலசிங்கம் தலைமையில் இடம்பெற்ற புதிய வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வில் – சேவாலங்கா இணைப்பாளர் எஸ்.ஆனந்தராசா, யாழ். மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி, வடமராட்சி மாவீரர் துயிலுமில்லப் பொறுப்பாளர் தமிழரசன், கடற்புலிகளின் வல்வை பிரதேச பொறுப்பாளர் செழியன் ஆகியோர் கலந்துகொண்டனர். (91)

## இளைஞர், யுவதிகளுக்கு முழுநாள் கருத்தரங்கு

(சுதுமலை)

மணற்காடு பொற்பதி இளைஞர், யுவதிகளுக்கான முழு நாள் கருத்தரங்கு நாளை மறுதினம் சனிக்கிழமை கைதடி சனசமூக நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

இளைஞர், யுவதிகளுக்கான தலைமைத்துவ நிர்வாக முகாமைத்துவம் தொடர்பான கருத்துரையை, கைதடி பாலசுப்பிரமணியப் பாடசாலை அதிபர் வழங்கவுள்ளார்.

## சிங்கப்பூருக்கான வர்த்தக சுற்றுலா

(யாழ்ப்பாணம்)

யாழ்.வணிகர் கழத்திலிருந்து எதிர்வரும் 20 ஆம் திகதியன்று சிங்கப்பூருக்கான வர்த்தகச் சுற்றுலாவொன்றை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகிறது.

இதில் பங்குபற்ற விரும்பும் வர்த்தகர்கள் மானிப்பாய் வீதியிலுள்ள யாழ்.வணிகர் கழகக் காரியாலயத்துடன் தொடர்புகொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது. (116)

## புனரமைப்பு கிராமங்கள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

நியாப் II திட்டத்தின் கீழ் வலி. கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மூன்று கிராமங்கள் மையக் கிராமங்களாகத் தெரிவுசெய்யப்பட்டு, புனரமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்காகப் புத்தூர் கிழக்கு, உரும்பிராய் தெற்கு, வாதரவத்தை ஆகிய கிராமங்களே தெரிவுசெய்யப்பட்டுள்ளன. (90)

## இல்ல மெய்வன்மை போட்டி

(சுதுமலை)

தம்பசிட்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு அதிபர் க.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் – ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் க. ஸ்ரீமோகன் பிரதம விருந்தினராகவும், கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.பாஸ்கரன், அரசியற்துறைப்பொறுப்பாளர் நா.ஈழமாறன், உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் சி.மகாலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (91)

✤ ✤ ✤

(கைதடி)

கைதடி நவீல்ட் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளைமறுதினம் காலை 9.30 மணிக்குப் பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் கே. கணேஸ் கலந்துகொள்ளவுள்ளார்.

# நமது ஈழநாட்டில் வெளியான சிறுகதைகள் இரண்டுக்கு விருது

(யாழ்ப்பாணம்)

இரசிகமணி கனக செந்திநாதன் நினைவாக வருடாந்தம் வழங்கப்பட்டுவரும் 'கனக செந்திநாதன் கதா விருது' இந்தவருடமும் 6 பேருக்கு வழங்கப்படவுள்ளது.

கனகசெந்தி விருது பெறுவோரின் சிறுகதைகள் வருமாறு –

முள்ளை முள்ளால் – ஜுனைதா ஷெரிப் (தினகரன் வாரமலர்), மாயாவதியின் கனவு – செம்பியன்செல்வன், (நமது ஈழநாடு), மீள்தல் – சாந்தன் (நமது ஈழநாடு), ஜென்மம் – நீர்வைப்பொன்னையன் (தினக்குரல்), நாடும் நம் மக்களும் – குந்தவை (மல்லிகை – 40 ஆவது ஆண்டு மலர்), பொழுது– க.சட்டநாதன் (மல்லிகை– 40 ஆவது ஆண்டு மலர்).

ஈழத்தின் மூத்த சிறுகதையாளரும், விமர்சகருமான இரசிகமணியின் பெயரால் தெரிவுசெய்யப்பட்டுவரும் இந்தச் சிறுகதைகள் ஈழத்தின் சிறுகதை இலக்கியத்துக்கு பெருமை சேர்க்கின்றன. இந்த விருதுக்கான நிதி நன்கொடையை ஈழத்தின் இன்னுமொரு மூத்த எழுத்தாளரான ந.அனந்ததேவன் வழங்கிவருகிறார்.

கடந்த ஆண்டு இலங்கை இலக்கியப் பேரவையின் பெருவிழாவின் போது தெரிவுசெய்யப்பட்ட 4 சிறுகதைகளுக்கு இந்த விருது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நெடுந்தீவில் நடைபெற்ற நடமாடும் வைத்தியசேவை

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலையில் – கடந்த திங்கட்கிழமையன்று காது, மூக்கு, தொண்டை தொடர்பான நோய்களுடையவர்களுக்கான நடமாடும் வைத்திய சேவையொன்று இடம்பெற்றது.

இந்த மருத்துவ சேவையின் போது, நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் பயனடைந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

புலம்பெயர்ந்து லண்டனில் வசிக்கும் நெடுந்தீவைச் சேர்ந்த சத்திர சிகிச்சை நிபுணர் என்.சந்திரபாலனால் இந்த மருத்துவமுகாம் நடத்தப்பட்டது.

இதற்கான ஒழுங்குகளை நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலை வைத்தியர் என்.திருநாவுக்கரசு மேற்கொண்டிருந்ததுடன், பொது அறிவித்தலைத் தேசிய எழுச்சிப்பேரவையினரும் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (113)




# பழையதில் நுழைத்தொரு பசுமைப் புரட்சி...

இன்றைய வளர்ந்துவரும் விஞ்ஞான யுகத்திலே மனிதனுக்குச் சவாலாக அமைந்துள்ள விடயங்களில் சூழல் மாசடைதல் என்பது முக்கிய இடத்தை வகிக்கிறது என்பதை யாராலும் மறுத்துவிடமுடியாது. எந்த மனிதன் தனது நேரத்தைச் சுருக்கி, தனக்கான தேவைகளைப்பூர்த்தி செய்யவென விஞ்ஞானத்தைப் புகுத்தி பல்வேறுபட்ட கண்டுபிடிப்புகளைச் செய்தானோ, அதே மனிதன் அவ்வாறான பல கண்டுபிடிப்புகளால் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் வேண்டத்தகாத பின்விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியவனாகிறான்.



அந்தவகையில் பல தரப்பட்ட தேவைகளுக்காக உருவாக்கப்பட்டு பொலித்தீன் (**Polyethene**), பொலிபுறப்பைலீன் (**Polypropylene**), பொலிவனைல் குளோரைட்டு (**Poly Vynlye Chlorite**) மற்றும் பிளாஸ்டிக் (**Plastic**) என விதவிதமான விஞ்ஞானப்பெயர்களைத் தாங்கி, மனித பயன் பாட் டிலுள்ள சேதனப் பல் பகுதியச் சேர்வைகளும் அடங்குகின்றன. இந்தப் பல்பகுதியத்தின் கண்டுபிடிப்பால் எவ்வளவுக்கு எவ்வளவு மகிழ்ந்த நாம், இன்று அதனைக் கண்டு அஞ்சி ஓட வேண்டிய நிலையில் உள்ளோம் என்பதை நினைவுக்குக் கொண்டுவருதல் அவசியமாகும்.

இன்றுள்ள நிலைமையில் எந்தவொரு குடும்பத்தினதும் அன்றாட வாழ்க்கையுடன் ஒட்டிப்போயுள்ள விடயங்களில், இந்தப் பல்பகுதியங்களின் பயன்பாடும் முக்கியமானதொன்றாகும். காலையில் பயன்படுத்தும் பிளாஸ்டிக் தேனீர்க் குவளை தொடங்கி, மதியம் உணவு பரிமாறப் பயன்படுத்தும் **Lunch Sheet** உட்பட எத்தனை தேவைக்கு, எத்தனை தடவைகள் இந்தப் பல்பகுதியங்களைப் பயன்படுத்துகிறோம்.

யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளை எடுத்துக்கொள்வோமானால் – குறிப்பாக யாழ்ப்பாண நகரப்பகுதி மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் அமைந்துள்ள சுற்றாடலில், அதிகளவு பொலித்தீன் பைகள், பிளாஸ்டிக் குவளைகள், **Lunch Sheet** வகைகள், ஐஸ்கிறீம் குவளைகள் என பல வடிவங்களில், பல அளவுகளில், பல வர்ணங்களில் இந்தப் பல்பகுதியப் பொருட்கள் விசிறப்பட்டுள்ளதை அல்லது எரிக்கப்பட்டுள்ளதை முற்றாக அழிவடையாத கரிப்பெறுதிகளைக் காணக்கூடியதாகவுள்ளது. ஏன் இந்தவகையான பொருட்களை நாம் முற்றாக அழிக்க முடியாதுள்ளது? என்பதை ஆராயுமிடத்து, நாம் சாதாரணமாக எமது பயன்பாட்டுக்குத் தேவையில்லாதவற்றை நிலத்தில் புதைத்தோ அல்லது நெருப்பில் எரித்தோ அழிக்க முயல்கிறோம். அந்தவேளையில், மண்ணிலுள்ள நுண்ணுயிர்களால் பிரிகையடைதலாக்கல் என்ற செயல்முறை மூலம், இவ்வாறு நிலத்தில் புதைக்கப்பட்டவை அழிக்கப்படுகின்றன.

ஆனால் பொலித்தீன், பொலிபுறப்பைலீன் மற்றும் பிளாஸ்டிக் என்பவற்றாலான பொருட்களை அல்லது அதன் பெறுதிகளை மண்ணிலுள்ள நுண்ணுயிர்கள் பிரிகையடையச் செய்யும் ஆற்றல் அற்றனவாக உள்ளன. அதே வேளையில் – எரிக்கப்படும் இந்த வகையான பல்பகுதியச் சேர்வைகள் முற்றாக எரிந்து சாம்பலைக் கொடுப்பதில்லை. மாறாக பூரண தகனத்துக்கு உட்படாது, கரிய நிறப் பெறுதிகளைக் கொடுக்கின்றன. இந்தப் பெறுதிகளையும்கூட மண் நுண்ணங்கிகளால் பிரிகையடையச் செய்யமுடியாதுள்ளது. இவற்றின் பூரண பிரிகையடைதல் நிகழாத விடத்தும், இவற்றின் எரியூட்டலில் மற்றும் இவை மண்ணிலுள்ள பல்வேறுபட்ட பொருட்களுடன் ஏற்படுத்தும் தாக்க விளைவுகளால் உருவாக்கப்படும் நச்சுவாயுக்களும் சூழலுக்குப் பரவி, எமக்கு ஆபத்தை ஏற்படுத்து கின்றனவாகும்.

இந்த நிலையில் நாம் பொலித்தீன் முதலியவற்றை நிலத்தில் புதைத்தோ அல்லது எரித்தோ அகற்ற முயலும்போது, எங்களை நாங்களே தற்காலிகமாகக் கழிவிலிருந்து விடுவித்துக் கொள்வதாக நினைத்துக் கொள்கிறோம். மாறாக சூழலில் மாசடைதலுக்குத் துண்டுகோலாக அமைகிறோம் என்பதைச் சிந்திக்கத் தவறுகிறோம். இந்தவகை சேதனப் பல்பகுதியங்கள் எந்தக் காலத்திலும் எந்த நுண்ணங்கியாலும் அழிக்க முடியாதுள்ளது என இதுவரையான ஆய்வுகளை மேற்கோள்காட்டி விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக்குடன் பின்னிப்போயுள்ள எங்கள் வாழ்விலிருந்தும், சூழல் மாசடைதல் பிரச்சினையிலிருந்தும் எம்மை விடுவித்துக் கொள்ள வேண்டுமாயின், ஒன்று – இந்தப் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களின் பாவனையைப் படிப்படியாகக் குறைத்து அதற்கு மாற்றீடாகச் சூழலை மாசுபடுத்தாத மூலப்பொருட்களாலான பொருட்களைப் பயன்பாட்டில் எடுத்துக்கொள்ள வேண்டும். இரண்டாவது – பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பாவனையை மேற்கொள்ளாது எமது அன்றாட வாழ்வை மாற்றியமைத்துக்கொள்ள வேண்டும். இதில் இரண்டாவதாகச் சொல்லப்பட்ட விடயத்தை எம்மால் இலகுவாக நடைமுறைப்படுத்த முடியாது.




ஆகவே முதலாவது வழிமுறையூடாக முதலில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் வகைகளாலான மூலப்பொருட்களையோ அல்லது முடிவுப் பொருட்களையோ எமது பிரதேசத்துக்கு இறக்குமதியாவதைத் தடைசெய்து, அதன் பயன்பாடுகளைத் தவிர்க்கவேண்டும். இனி இவற்றின் பயன்பாட்டுக்கு நேரொத்த பயன் பாட்டைத் தரவல்லதும், நுண்ணங்கியால் இலகுவில் பிரிந்தழியக் கூடியதுமான பல்பகுதியங்களைக் கொண்டு, மாற்றீட்டுப் பொருட்களைச் செய்ய முடியும் என்று விஞ்ஞானிகள் தற்போது கண்டுபிடித்துள்ளனர்.

உதாரணமாக – உயிர்ப் பல்பகுதியங்கள் என்ற வகைக்குள் அடங்கும் காபோவைதரேற்றுக்கள், புரதங்கள் மற்றும் இலிப்பிட்டுக்கள் என்பவற்றைக்கொண்டு எமக்கான பாவனைப் பொருட்களைத் தயாரித்துக்கொள்ள முடியும். காபோவைதரேற்றுக்கள் எமக்கு மலிவாகவும், இலகுவாகவும் கிடைக்கக் கூடிய மூலப்பொருட்களாகும். இதனுள் அடங்கும் செலுலோசு மற்றும் மாப்பொருளைக் கொண்டு பலவகையான பாவனைப் பொருட்களைத் தயாரிக்கமுடியும். தாய்லாந்தில் மரவள்ளிக் கிழங்கிலிருந்து பெறப்பட்ட மாப்பொருளைக்கொண்டு, பல பாவனைப் பொருட்களைச் செய்துள்ளனர். திரவ உணவைக்கூடப் பாதுகாத்துக் கொள்ளவும், திரவநிலை உணவுகளைப் பரிமாறிக்கொள்ளவும்கூட இந்தவகை உயிர்ப் பல்பகுதியங்களாலான பாவனைப் பொருட்களைப் பயன்படுத்துகின்றனர்.

(தொடரும்...)

**ச.நகுலேஸ்வரன்,**
**விவசாய இரசாயனவியல்துறை, விவசாயபீடம்,**
**தகவல் தொடர்புமையம்.**

# தடையின்றி நீர் விநியோகிக்கப்படின் எலுமிச்சை காய்களை வருடம் முழுவதும் பெறலாம்



எலுமிச்சைப் பழச்சாறு அமிலத்தன்மை கொண்டதாக இருப்பதோடு, மருத்துவ குணங்கள் கொண்டதாகக் காணப்படுகிறது. தேக ஆரோக்கியத்துக்கு உகந்தது. எலுமிச்சைப் பழம் மூலம் தயாரிக்கக்கூடிய உற்பத்திகள்–

1. கோடியல்
2. எலுமிச்சை எண்ணெய்
3. ஊறுகாய்
4. பான வகைகள்

1000 – 1400 மில்லிமீற்றர் வருடாந்த மழைவீழ்ச்சி கொண்ட பிரதேசம் எலுமிச்சைப் பயிருக்கு உகந்தது. 25° சென்டிகிரேட் – 30° சென்டிகிரேடுக்கு இடைப்பட்ட வெப்பநிலை உகந்தது. 13° சென்டிகிரேடுக்குக் குறைந்த வெப்பநிலையும், 38° சென்டிகிரேட் இற்கு அதிகமான வெப்பநிலையும் எலுமிச்சைப் பயிரின் வளர்ச்சியைக் குறைத்துவிடும். மண்ணில் 5.6 PH அளவு இருத்தல் வேண்டும்.

பலவிதமான எலுமிச்சை வகைகள் உண்டு. ஒவ்வொருவகையும், ஒவ்வொரு தோற்றத்தைக் கொண்டது. சில மரங்கள் 3 –4 மீற்றர் அளவு உயரமாக சற்றுப் பரந்து இருக்கும். கிளைகள் கொண்டவை.

விதைக் கன்றுகள் மூலம், எலுமிச்சை மரம் ஒன்றை உருவாக்க முடியும். நல்ல குணாம்சங்களைக் கொண்ட தாய் மரங்களின் காய்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதன் பின்னர், விதைகளுக்குக் காயமோ அல்லது கீறலோ ஏற்படாதவாறு எலுமிச்சைப் பழத்திலிருந்து விதைகளை நீக்க வேண்டும்.

பிரித்து எடுத்த விதைகளை நன்றாகக் கழுவி, மணல் பதியம் ஒன்றில் முளைக்கவைக்க வேண்டும். 7 – 10 நாட்களில் விதைகள் முளைப்பதோடு, விதைகள் முளைத்து 3– 4 வாரங்கள் சென்ற பின்னர் பூச்சாடி அல்லது பேணிகளுக்குள் மாற்றிக்கொள்ள வேண்டும்.

ஒரு ஏக்கருக்கு, 6 மீற்றர் x 3 மீற்றர் இடைவெளியில் எலுமிச்சை மரங்களை வளர்ப் பதற்கு 220 கன்றுகள் தேவை. ஒரு ஏக்கருக்கு, 4 மீற்றர் x 4 மீற்றர் இடைவெளியில் எலுமிச்சை மரங்களை வளர்ப்பதற்கு 250 கன்றுகள் தேவை.

வருடம் முழுவதும் நீர் விநியோகம் மேற்கொள்ள முடியுமாயின், எல்லா பருவத்திலும் எலுமிச்சைக் கன்றுகளை முளைக்கவைக்கலாம். இல்லாவிடின் மழைக்கால ஆரம்பத்தோடு முளைக்கவைக்கலாம்.

கீழ்க் குறிப்பிட்டுள்ள உரங்களின் அளவை இரண்டாகப் பிரித்து, சிறுபோகம், பெரும்போகம் என வழங்கவேண்டும். சிறு கன்றுகளுக்கு உரம் வழங்கும்போது, கன்றில் இருந்து 15 – 20 சென்ரி மீற்றர் தூரத்தில் மரத்தைச் சுற்றிப்போட்டு மண்ணுடன் கலக்கவேண்டும். மரத்தைச் சுற்றி மண்ணைக் கொத்தும்போது, வேர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டால் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

இரசாயன உரங்களைப் போலவே மரத்துக்கு உக்கிய மாட்டெரு 2 கூடைகள் ஒரு வருடத்துக்குப் போடுவது உகந்தது. தொடர்ச்சியான நீர்விநியோகம் எலுமிச்சைப் பயிருக்கு நல்லது. வரண்ட காலத்தில், நீர் விநியோகம் செய்தால், காய் காய்க்காத காலங்களிலும் காய்க்க வைக்கலாம்.

மரத்தின் அடியிலும், கிளைகள் பரந்து இருக்கும் மட்டம் வரையுள்ள இடங்களிலும் களைகளை நீக்கிவிட வேண்டும். களைகளை நீக்குவதற்காக மண் கட்டியை உபயோகிக்கும்போது, மரத்துண்டுகள், வேர்களுக்குப் பாதிப்பு ஏற்படாமல் காத்துக் கொள்ள வேண்டும். எலுமிச்சைக் கன்றுகளுக்கு இடையிலுள்ள களைகளையும் நீக்கிவிடவேண்டும்.

**100 கிராம் தேசிக்காயில் அடங்கியுள்ள போசாக்குகள்**

சக்தி 59.00 கிலோகிராம்.
புரதம் 1.5 கிராம்.
எண்ணெய் சத்து 1.0 கிராம்.
காபோஹைதரேட் 10.9 கிராம்.
கல்சியம் 90.0 மில்லி கிராம்.
பொசுபரஸ் 20.0 மில்லி கிராம்.
இரும்புச் சத்து 0.3 மில்லி கிராம்.
கரோடீன் 15.0 மில்லி கிராம்.
தயமின் 20.0 மைக்கேரா கிராம்.
ரைபோ பிலோவின் 30.0 மைக்ரோ கிராம்.
விட்டமின் சீ 63.0 மில்லி கிராம்.

**ச.சந்திரகாசன்**

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சங்கானை | சாவகச்சேரி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 20/= | 30/= | 40/= | 25/= | 30/= | 20/= | 30/= |
| வெண்டிக்காய் | 10/= | 20/= | 30/= | 10/= | 10/= | 30/= | 30/= |
| உருளைக்கிழங்கு | 50/= | 50/= | 60/= | 50/= | 50/= | 50/= | 60/= |
| கத்தரிக்காய் | 30/= | 40/= | 50/= | 30/= | 30/= | 30/= | 60/= |
| பாகற்காய் | 20/= | 30/= | 40/= | 20/= | 25/= | 40/= | 50/= |
| கரட் | 40/= | 35/= | 40/= | 40/= | 45/= | 50/= | 60/= |
| பீற்றூட் | 15/= | 20/= | 30/= | 15/= | 15/= | 20/= | 40/= |
| முருங்கைக்காய் | - | 200/= | 200/= | 250/= | 200/= | 200/= | - |
| வெங்காயம் | 20/= | 25/= | 30/= | 30/= | 30/= | 30/= | 40/= |
| பச்சை மிளகாய் | 40/= | 40/= | 50/= | 40/= | 40/= | 40/= | 60/= |

யாழ்ப்பாணம்

தொழில்மலர்

# கணினியில் கற்க வேண்டிய முக்கிய விடயங்கள்

தி.சாரங்கன்



இன்று நாம் கணினி யுகத்தில் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். வீட்டுக்கொரு தொலைக் காட்சி இருந்த காலம் மாறி, வீட்டுக்கொரு கணினி என்ற காலம் இது. ஆகவே கணினி இல்லாமல் நாம் இல்லை. இத்தகைய கணினி மட்டும் இருந்தால் போதுமா? அதை இயக்க வும் தெரிந்திருக்க வேண்டும் அல்லவா? அதற் காகத்தான் நாம் கணினியைப் படிக்கிறோம். அதே போல் சிலர் தொழில் வாய்ப்புக்காகவும், பொழுது போக்குக்காகவும் படிக்கின்றனர்.

உங்களுக்கேற்றவாறு பல கணினிக் கற்கை நெறிகள் உள்ளன. அதை நீங்கள் தெரிவு செய்யலாம். சில முக்கிய கற்கை நெறிகளை விரிவாகப் பார்ப்போம்.

1. Diploma in Ms office இது கணினியின் ஆரம்ப அறிவை வழங்கும் பாட நெறி ஆகும். இதற்குள்ளே Ms Word, Ms Execl, Ms Power point, Ms Access என முக்கிய விடயம் உள் ளது. இதிலே

Ms Word - தட்டச்சு நோக்கத்துக்கும், பிரதி எடுத்தலுக்கும் பயன்படும்

உ+ம் :- கடிதத்தைத் தட்டச்சு செய்தல்.

Ms Excel - கணித சமன்பாடுகளை இலகு வாக செய்யப் பயன்படும்

உ+ம் :- இலக்கங்களைக் கூட்ட, பெருக்க சராசரி நிலை காணப்பயன்படும்.

Ms Access - பல தரவுகளைச் சேமித்து வைக்கப் பயன்படும்.

Ms Powerpoint - Animation உருவாக்கப் பயன்படும்

உ+ம் :- விளம்பரத் துறை.

இவைபோன்ற விடயங்கள் மிக முக்கியமாக உள்ளடக்கப்பட்டிருக்கும். இந்தக் கற்கை நெறி யைக் கற்றுமுடிந்தபின், அலுவலக உத்தி யோகத்தராக அல்லது Type Setter ஆகவோ அல்லது கணினி இயக்குநராகவோ அல்லது Data Entry Operator ஆகவோ வேலை செய்ய லாம்.

2. Diploma in Dask Top Publishing - D.T.P

இந்தக் கற்கைநெறி சித்திரத் துறையை மையமாகக் கொண்டுள்ளது. எனினும் இந்தக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்வதன் மூலம் இலகுவாகத்தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள லாம். இந்தக் கற்கைநெறிக்கு அதிக கேள்வி நிலவி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இந்தக் கற்கையிலே - Photoshop , Pagemaker, Coraldraw ஆகிய 3 முக்கிய பாடங்கள் உண்டு இதில் -

Photoshop - ஸ்ரூடியோ வேலைக்கும் படங் களை நிறம் மாற்றுதல், வெட்டிப் பொருத்துதல் போன்றவைக்குப் பயன்படும்

உ+ம் :-ஸ்ரூடியோக்கடை, பத்திரிகைத்துறை.

Pagemaker - தட்டச்சு நோக்கத்துக்குப் பயன்படும்

உ+ம் :- பத்திரிகைத்துறை, அச்சகத் துறை.

Corel Draw - Invitation Card தயாரிக்கப் பயன்படும்.

இந்தக் கற்கை நெறியைக் கற்பதன் மூலம் Type Setter ஆகவும் Designer ஆகவும் Digital Production Artist ஆகவும் தொழில் வாய்ப்பை இலகுவாகப் பெறலாம்.

3. Hardware Engineering.

இந்தக் கற்கை நெறி கணினியை திருத்து வது தொடர்பான பாட நெறியாகும். Repairing & Electrical துறையில் ஆர்வம் இருப்பின் இலகு வாக இந்தப் பாடநெறியைப் பூர்த்தி செய்யலாம். தொழில் வாய்ப்பையும் இலகுவாகப் பெறலாம்.

4. Computer Programming.

இந்தக் கற்கை நெறிக்கு, ஆங்கில அறிவு மிகமிக அவசியம். கணினியின் ஆரம்ப அறி வில்லாமல் இந்தத் துறைக்குப் போவது கடினம். அதிக வேலை வாய்ப்பை எதிர்பார்க்க முடியாது.

உ+ம் :- C/C ++

HTML, JAVA


Visuval Basic

5. Diploma in Software Engineering -இது Computer Programme - தயாரிப்பது பற்றி கற்பது ஆகும். இதற்கும் பூரண ஆங்கில அறிவு அவசியம் காரணம். Programme எழுதுவதாகும். இதற்கும் தொழில் வாய்ப்பு அதிகம். அதிகவருமானம் ஈட்டிக் கொள்ளலாம். மேற்கூறிய கற்கை நெறியில் உங்களுக்குப் பொருத்தமான, உங்கள் தகுதிக் கேற்ப கற்கை நெறிகளைத் தெரிவு செய்து பாட நெறியைத் தொடரலாம்.

"கணினி யுகத்தில் வாழ்கிறோம், கணினி பற்றிய அறிவு அவசியமல்லவா?"

# நிறுவன குறிக்கோளை விரைந்து அடைய உதவுவதே பணியமைப்பின் நோக்கமாகும்.

நதியின் ஒரு கரையிலிருந்து மறு கரைக்குச் செல்வதற்கு எங்களுக்கு ஒரு தோணி தேவைப்படுகிறது. ஓர் இலக்கை நோக்கி விரைந்து பயணம் செய்வதற்கு, எங்களுக்கு ஓர் ஊர்தி தேவைப்படு கிறது. இதே போன்று ஒவ்வொரு நிறு வனமும் நமது இலக்கை அடைவதற்கு



ஒரு பணியமைப்புத் தேவைப்படுகிறது. இந்தப் பணியமைப்பு - மனிதர்களால் ஆனது. மனிதர்களிடையே ஏற்படும் உற வுப் பின்னல் அடிப்படையிலேயே பணி யமைப்பு உருவாக்கப்படுகிறது.

ஒரு நிறுவனம் தனது திட்டமிடுத லில் எந்த எந்தப் பணி, எப்படி முடிக் கப்பட வேண்டும், எப்போது முடிக்கப் பட வேண்டும் என்று முடிவெடுக்கிறது. அதன்படி அந்தப் பணிகள் யாரால் முடிக்கப்படவேண்டும் என்பதைப் பணியமைப்பு விளக்குகிறது.

ஒரு நிறுவனத்தில் ஆயிரக்கணக்கான பணிகள் முடிக்கப்பட வேண்டியுள்ளன. இந்தப் பணிகளை முறையாகத் தொகுத் தும், வகுத்தும் ஓர் அமைப்பாக உருவாக்கி, நிறுவனத்தின் குறிக்கோளை விரைந்து அடைய உதவுவதே பணியமைப்பின் நோக்க மாகும்.

ஒரு நிறுவகத்தில் எல்லாப் பணிகளுக் கும் ஒரே எண்ணிக்கையில் பணியாளர் கள் தேவைப்படுவதில்லை. சில பணி களுக்குக் குறைவாகத் தேவைப்படுவார் கள். சில பணிகளுக்குக் கூடுதலாத் தேவைப்படு வார்கள். எனவே பணிகளை அலகு களாகப் பிரித்து, அவற்றின் தேவைக் கேற்ப பணியிட ங்கள் உருவாக் கப்படல் வேண் டும். ஒரே வகை யைச் சேர்ந்த பணி கள் குழுக்களாக் கப்பட வேண் டும்.

அலுவலகப் பணிகள், தொழி லகப் பணிகள் தனித்தனி குழுக் களாகின்றன. தொழிலகத்தில் கொள்முதல், உற்பத்தி, தரக்கட்டுப்பாடு ஆகியவை தனித்தனிக் குழுக்களாகின்றன. அலுவலகப் பணி களும், திட்டமிடல், நிதி, விற்பனை, பணி யாளர், நிர்வாகம் என்று தனித்தனிக் குழுக் களாகின்றன. இவ்வாறு பணிக்குழுக்கள், பணி அடிப்படையிலும், திறமை அடிப் படையிலும், உற்பத்தித் திறன் அடிப் படையிலும் பிரிவு செய்யப்படுகின்றன. இப்படிப் பிரிக்கப்படும் குழுக்கள் ஒருங் கிணைந்து செயற்படுவதே பணியமைப் பாகும்.

ஒரு பெரிய நிறுவனத்தில் ஆயிரக் கணக்கான பணியிடங்கள் தேவைப் படும். அவற்றைச் சிறு குழுக்களாகப் பிரித்தால், அவை நூற்றுக்கணக்கில் அமையும். எனவே இத்தகைய பிரிவுகள் துறைகளின் கீழ்ச் செயற்படுமாறு வடி வமைக்கப்படும். ஒரு மேற்பார்வையா ளர், பத்து நபர்களின் பணிகளை மேற்ப்

**ஒவ்வொரு பணியிடமும், அது தோற்றுவிக்கப்படாவிட்டால், செயற்பாட்டில் குறைவு நேருமோ? தோற்றுவிப்பதால் நிறைவு ஏற்படுமோ? என்ற கேள்விகளின் அடிப்படையில் உருவாக்கப்படல் வேண்டும்.**

பார்வை செய்யலாம் என்று வைத்துக் கொண்டால், அதற்குக் கூடுதலாகப் பணியாளர்களை மேற்பார்வை செய்ய நேரும்போது, பணியில் திறமை குறை யும். எனவே ஒவ்வொரு படிநிலை யிலும் பணிகளின் அடிப்படையில் மேற்பார்வையாளர் நியமிக்கப்படல் வேண்டும். இந்தக் குழு ஒரு பிரிவாக வடிவம் கொள்ளும். பல பிரிவுகளுக்குப் பொறுப்பாக ஒரு மோலாளரோ, துணை மேலாளரேர இருப்பார்.

ஒவ்வொரு பணியிடமும் அது தோற்றுவிக்கப்படாவிட்டால், செயற் பாட்டில் குறைவு நேருமோ, தோற்று விப்பதால் நிறைவு ஏற்படுமோ என்ற கேள்விகளின் அடிப்படையில் உரு வாக்கப்படல் வேண்டும். அதேபோன்று பணிச்சுமை ஒரு குறிப்பிட்ட பணியிடத் தில் குவிந்து விடாது, பரவலாக்கப்படு வது உறுதி செய்யப்பட வேண்டும்.

துறைகளும், பிரிவுகளும், பணி யிடங்களும் இவ்வாறு உருவாக்கப் படும்போது, அவை நிறுவனத்தின் குறிக்கோளை நிறைவு செய்யும் வகை யில் உள்ளனவா என்பதையும், செயற் பாடுகளுக்குத் தேவையான அதிகார மும், பொறுப்பும் அழிக்கப்பட்டுள்ள னவா என்பதையும், அவற்றுக்கிடையே தகவல்தொடர்புஏற்படவழிவகைகள்செய் யப்பட்டுள்ளனவா என்பதையும் பார்த் துக் கொள்ளவேண்டும். (தொடரும்...)

சுயதொழில்

## புற்பாய் தயாரித்தல்

சாதாரண மனிதனின் அன்றாடத் தேவைக்கு புற்பாய் பயன்படுத்தப்படுகிறது. இல வசமாகக் கிடைக்கும் புல்லைப் பயன்படுத்தி, சிறு முதலீட்டுடன் அதிக வருமானத்தைத் தரும் தொழிலாக இது விளங்குகிறது. வீடுகளில் வைத்தே குடிசைக் கைத்தொழிலாக இதனை மேற்கொள்ள முடியும்.

வெப்பம் அதிகமான பிரதேசங்களில் புற்பாய்களே படுப்பதற்கும், வைபவங்களின் போது விரிப்பதற்கும் பயன்படுத்தப்படுகின்றன. புற்பாய்களுக்கு நல்லதொரு சந்தை வாய்ப்பு உள்ளது.

சிறிய காலப்பயிற்சியுடன் இந்தத் தொழிலை ஆரம்பிக்கலாம்.

மூலப் பொருள் – கல்பன்புல்

இந்தப்புல் கிடைக்கும் இடங்கள்.

வடபகுதியில் – துணுக்காய், வட்டக்கச்சி, கிளிநொச்சி ஆகிய இடங்கள்.

திருகோணமலை மாவட்டத்தில் – சிப்பித்திடல். புதுக்குடியிருப்பு, தம்பலகாமம், கிண்ணியா, நிலாவெளி, கந்தளாய், கோமரசங்கடவெவ, பத்மீகம, அமதிகம ஆகிய இடங்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் – குருக்கள்மடம், இராஜபுரம், மரப்பாலம், புல்லுமலை, கிரான்குளம், மயிலம்பாவெளி, வெல்லாவெளி, கொம்மாந்துறை ஆகிய இடங்கள்.

அம்பாறை மாவட்டத்தில் – மகாஓயா , வீரமுனை, சம்மாந்துறை ஆகிய இடங்கள்.

உபகரணங்கள் – கைத்தறிப்பொறி, நூல், சாயம், துணி 48" அங்குல றீட் கீல்ஸ் செற்.

# தாயகமெங்கும் சிறப்பாக நடைபெற்ற சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள்!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு சர்வதேச மகளிர்தின நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வு பெண்கள் தொழிற் பயிற்சி நிலையத் தலைவர் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக, கிளிநொச்சி மத்தியகல்லூரி முன்றலில் இருந்து, பெண்கள் எழுச்சிக் கோஷங்களை எழுப்பியவாறு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தை வந்தடைந் தனர்.

நிகழ்வின் பொதுச்சுடரை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம், திருமதி பொன்.தியாகம் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தமிழீழ தேசியக் கொடியை கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவாணன் ஏற்றிவைத்தார். கருத்துரைகளை உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தைச் சேர்ந்த மணிமேகலை, ஒக்ஸ்பாம் நிறுவன பிரதிநிதி ரவி, 'பெண்களும் சட்டமும்' என்ற தலைப்பில் போராளி தமிழ்க்கவி மற்றும் தூயவன், அரசறிவியற் கல்லூரியைச் சேர்ந்த அரசண்ணா ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வின் ஆசியுரையை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் நிகழ்த்தினார். தொடர்ந்து கலைநிகழ்வுகள் இடம்பெற்றன.

இதேவேளை, மன்னாரில் மகளிர் தின நிகழ்வு – கத்தோலிக்க பண்பாட்டுக் குழுவினரால் புனித செபஸ்தியார் தேவாலயத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வு அருட்திரு விக்ரர் சோசை தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கருத்துரைகளை மன்னார் மறைமாவட்ட ஆயர் அருட்திரு இராயப்பு ஜோசப் ஆண்டகை நிகழ்த்தினார். மன்னார் மாவட்ட பெண்கள் அமைப்புக்கள், பொதுமக்கள் என பலர் இதில் கலந்துகொண்டனர்.

வவுனியா மாவட்ட பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தால் புளியங்குளம் இந்துக்கல்லூரியில் நேற்று முன்தினம் சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வு மாவட்ட பெண்கள் அபிவிருத்தி நிறுவனப் பணிப்பாளர் புகழரசி தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை வவுனியா மாவட்ட அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் தர்மேந்திரா, வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பத்மநாதன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தமிழீழ தேசியக் கொடியை வவுனியா வடக்கு அரசியற்துறைப் பொறுப்பாளர் திலீப் ஏற்றிவைத்தார். 2 ஆம் லெப்டினன்ட் மாலதியின் திருவுருவப் படத்துக்கான ஈகச்சுடரை, தமிழீழ மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிவான் அல்லிராணி ஏற்றிவைத்தார். திருவுருவப் படத்துக்கான மலர் மாலையை போராளி ஜீவாநந்தினி அணிவித்தார்.

இந்த நிகழ்வின் சிறப்புரையை வவுனியா மாவட்ட துணை அரசியற் துறைப் பொறுப்பாளர் தர்மேந்திரா, வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் ஆகியோர் நிகழ்த்தினர்.

நீதிவான் அல்லிராணி 'பெண்களும் சட்டமும்' என்ற தலைப்பில் உரைநிகழ்த்தினார். தொடர்ந்து கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. இதில் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

# இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

## மார்ச் – 10

1876 : அலெக்ஸாண்டர் கிரகம் பெல், தான் கண்டுபிடித்த தொலைபேசி மூலம் முதன் முதல் தன் உதவியாளருடன் உரையாடியது. அவர் பேசிய முதலாவது பேச்சு வாட்ஸன் இங்கே வா என்பதேயாகும்.

1906 : பிரான்சில் மெரிகோட் என்னும் கிராமத்திலுள்ள நிலக்கரிச் சுரங்கத்தில் எதிர்பாராது நடந்த தீ விபத்து மற்றும் மண்சரிவுகளில் சிக்கி ஆயிரம் வரையான தொழிலாளர்கள் இறந்து விட்டதாக அறிவிக்கப்பட்டது. இதில் தப்பிய 13 பேர் இந்த மாதம் 30 ஆம் திகதி தாங்களாக சிரமப்பட்டு சுரங்கத்தில் இருந்து வெளியே வந்து சேர்ந்தனர்.

1917 : ரஷ்யாவில் பெட்டோ கிராட்டில் பொதுவேலை நிறுத்தம் பரவலாக ஆரம்பித்ததைத் தொடர்ந்து நாடெங்கும் இராணுவச் சட்டம் கொண்டு வரப்பட்டது.

1918 : பாரிசில் விமானத்தாக்குதல் தொடங்கியதைத் தொடர்ந்து, இரண்டு லட்சத்துக்கும் அதிகமானவர்கள் ரயில் மூலம் நகரை விட்டு வெளியேறினர்.

1920: பிரிட்டனில் ஹோம்ரூல் சட்டம் இயற்றப்பட்டதைத் தொடர்ந்து அயர்லாந்து இரண்டாகப் பிரிந்தது.

1939: நாஜிகள் உதவியுடன் தனி ஸ்லோவாக்கியா நாடு அமைப்பதற்காக முயற்சி செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு, செக்கோஸ் லாவாக்கியா பிரதமர் டிஸ்ஸோ பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

1956 : பெஃயிறி டெல்டா ரக விமானம் மணிக்கு 1823 கிலோமீற்றர் வேகத்தில் பறந்து சாதனை படைத்தது. இந்தச் சாதனையை விமானி பீட்டர்விஸ் நிகழ்த்தினார்.

1976: தொலைபேசி கண்டுபிடிக்கப்பட்டு, 100 வருடங்கள் நிறைவு விழா கொண்டாடும் இந்தியா, அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் பல்வேறு கட்டணங்களிலான புதிய தபால் தலைகளை வெளியிட்டன.

1977: சனிக்கோளைச் சுற்றி வளையங்கள் இருப்பதைப் போன்று யுரேனஸ் கோளைச் சுற்றியும் வளையங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

1993: பார்க்கின்ஸன்ஸ் விதிகளை வகுத்த சி.நார்த்கோட் பார்க்கின்ஸன்ஸ் மரணமானார்.

1995: சர்வதேச நிதியத்தின் பிரதிநிதியாக, பிரித்தானிய மகாராணியின் மைந்தன் ஆன் வறுமைப்பட்ட பிள்ளைகளுக்கு உதவும் நிறுவனங்களைப் பார்வையிடும் நோக்கில் இலங்கை வருகை தந்தார்.

2001: மாமனிதர் கிறிஸ்ரி ஜெயம் எலியேசர் அவுஸ்திரேலியாவில் காலமானார்.

தொகுப்பு – சந்துரு




# அடிப்படை வசதியற்ற நிலையில் மன்னார் வலய பாடசாலைகள்!

மன்னார் கல்வி வலயத்தில் பல பாடசாலைகளில் அடிப்படை வசதிகள் இதுவரை பூர்த்திசெய்யப்படவில்லை.

பண்டாரவெளி முஸ்லிம், தமிழ் வித்தியாலயம், சாந்திபுரம் தமிழ் வித்தியாலயம், தோட்டவெளி தமிழ் வித்தியாலயம், சென்.மேரிஸ் றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் வகுப்பறைக் கட்டடத் தொகுதிகள் பற்றாக் குறை காரணமாக – தற்காலிக கொட்டகைகளிலேயே வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

அத்தோடு கழிப்பறை வசதியின்மை, குடிநீர்த் தட்டுப்பாடு போன்ற அடிப்படைப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தே, இந்தப் பாடசாலைகள் இயங்கி வருகின்றன.

# சேதமடைந்த நிலையில் வீதி

(கிளிநொச்சி)

உடையார்கட்டு – சுதந்திரபுரம் கொலனி நோக்கிச் செல்கின்ற பிரதானவீதி படுமோசமாகச் சேதமுற்றுக் காணப்படுகிறது. இதனால், இந்த வீதியூடாகப் பயணிக்க முடியாத நிலை காணப்படுகிறது.

கடந்தகால போர் நடவடிக்கைகளின்போது சேதமடைந்த இந்த வீதி இன்றுவரை புனரமைக்கப்படவில்லை. இது தொடர்பாக இந்தப் பகுதி மக்கள் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்புகொண்ட போது – புனரமைத்துத் தருவதாக ஒப்புதல் அளிக் கப்பட்டது.

எனினும், இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் எனப் பெருமளவானோர், பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

# தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் சமூக ஆற்றுப்படுத்தல் பயிற்சிநெறி

(கிளிநொச்சி)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் நடைமுறைப் படுத்தப்பட்டுவரும் சமூக அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 11 கிராமங்களில் கடமையாற்றும் கிராம திட்ட அலுவலர்கள், சமூக உணர்வூட்டாளர்கள், கிராமத் தொண்டர்கள் ஆகியோருக்குத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் சமூக ஆற்றுப்படுத்தல் பயிற்சி நெறி கடந்த திங்கட்கிழமை பாரதிபுரம் கிராம பொது மண்டபத்தில் நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக நிகொட் திட்ட இணைப்பாளர் ரவிகாந்த் தலைமையில் நடைபெற்றது.

இதில் மங்கள விளக்கை தமிழர் புனர்வாழ்வுக்கழக நிகொட் திட்டப் பணிப்பாளர் சுடர், கிளிநொச்சி மாவட்டப் பணிப்பாளர் வே.கெங்காதரன், பாரதிபுரம் சமூக பொருளாதார அபிவிருத்திச் சங்கத் தலைவர் பொ.இராமலிங்கம், நிகொட் திட்ட சமூக உணர்வூட்டலாளர்களுக்கான இணைப்பாளர் செல்வி றூபா ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழ தேசியக் கொடியை பாரதிபுர ஊடக வளர்ச்சிப் பணிப் பொறுப்பாளர் அன்புமாறன் ஏற்றி வைத்தார்.

இந்த நிகழ்வின் சிறப்புரைகளை கிளிநொச்சி மாவட்ட அரச செயலக நிகொட் திட்ட உதவித் திட்டப்பணிப்பாளர் துஷ்யந்தி, மாவட்ட பணிப்பாளர் கெங்காதரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து பயிற்சியாளர்களுக்கான பயிற்சியை சமூக உணர்வூட்டாளர்களுக்கான இணைப்பாளர் றூபா வழங்கினார். இந்தப் பயிற்சி நெறியில் 33 பயிற்சியாளர்கள் பங்குபற்றினர்.

# முன்பள்ளி திறந்துவைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு – வட்டுவாகல் வடக்கு, செல்வபுரம் குடியிருப்பில் வேல்ட் விஷன் நிறுவனத்தால் அமைக்கப்பெற்ற முன்பள்ளியை நேற்றுமுன்தினம் வேல்ட் விஷன் நிறுவனப் பணிப்பாளர் டெசிகரன் திறந்துவைத்தார்.

இந்த முன்பள்ளிக்கான கற்றல் உபகரணங்களையும், வேண்டிய வசதிகளையும் வேலட் விஷன் நிறுவனம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

## முல்லைத்தீவு மாவட்டத்தில்

# இரு கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தற்காலிக குடிசைகளில் குடியமர்வு!

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டு, இடம்பெயர்ந்து நலன்புரி நிலையத்தில் வாழ்ந்துவந்த இரண்டு கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கடந்த சனிக்கிழமை தற்காலிகமாக அமைக்கப்பட்ட குடிசைகளில் குடியமர்த்தப்பட்டனர்.

அளம்பில் பிரதேசத்தில் சோ.ஆ நிறுவனத்தின் நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் அமைக்கப்பட்ட தற்காலிக குடிசைகளில் இந்த மக்கள் குடியமர்த்தப்பட்டனர்.

இதேவேளை, சிலாவத்தை தெற்கு தியாகுநகர் கிராமத்தைச் சேர்ந்த 75 குடும்பங்கள், சுவாமி தோட்டத்தில் கியூடெக் நிறுவனத்தால் அமைக்கப்பட்ட தற்காலிக குடிசைகளில் குடியமர்த்தப்பட்டனர்.

இந்த நிகழ்வின்போது இவர்களுக்கான உடனடி நிவாரணப் பொருட்களும் வழங்கப்பட்டன.

இதன்போது முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், முல்லைத்தீவு மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் மூர்த்தி, கடற்புலிகளின் சுனாமி நிர்மாணப் பணிப்பாளர் தினேஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# முல்லைத்தீவு விவசாயத் திணைக்களத்தினால் மண்வளம் பேணல் தொடர்பான கருத்தூட்டல்

முல்லைத்தீவு மாவட்ட விவசாயத் திணைக்களத்தால் மண்வளம் பேணல் தொடர்பான கருத்தூட்டல் தெருவோர நாடக நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட கிராமங்கள் தோறும் நடத்தப்பட்டு வருகிறது.

இதன் முக்கிய கருப்பொருளாக நெல் அறுவடையைத் தொடர்ந்து கிடைக்கும் வளமிக்க வைக்கோலை எரிப்பதைத் தடுப்பதும், அதன் பயன்பாடுகளை எடுத்துக் கூறுவதன்மூலம் வைக்கோலின் முக்கியத்துவத்தை உணர்த்துவதுமாகும்.

இந்த நாடகத்தை விவசாயத் திணைக்களத்தைச் சேர்ந்த ஊழியர்கள் நடத்தி வருகின்றனர். இதில் பெரும்பலான விவசாயிகள் கலந்து கொண்டு, ஆக்கபூர்வமான விளக்கங்களைப் பெற்று வருகின்றனர்.

# ஆரோக்கியபுரத்தில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வோருக்கான கலந்துரையாடல்

ஆரோக்கியபுரம் – பாலன் குளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வதற்கான கலந்துரையாடல் கடந்த சனிக்கிழமை ஆரோக்கியபுரம் பொது மண்டபத்தில் நடைபெற்றது.

கமக்கார அமைப்புத் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், 10 ஏக்கர் நிலம் நெல் விதைப்பதற்காக ஒதுக்கப்பட்டது.

இதற்கான நீர் வழங்கலானது இந்த மாதம் 31 ஆம் திகதி தொடக்கம், யூலை 30 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்படுமெனவும், கால்நடை கட்டுப்பாடு தொடர்பாகவும் முடிவெடுக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் அக்கராயன் பிரதேச தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர், கமக்காரர் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# பாடசாலை சீருடை, புத்தகப்பை வழங்கல்

முல்லைத்தீவு மாவட்ட தமிழீழ விளையாட்டுத் துறையினரால், கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு, பாடசாலைச் சீருடைகளும், புத்தகப்பைகளும் நாளை வழங்கப்படவுள்ளன.

கள்ளப்பாடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, முல்லைத்தீவு றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்களுக்கே இந்த உதவிகள் வழங் கப்படவுள்ளதாக, முல்லைத்தீவு மாவட்ட தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கமல் தெரிவித்தார்.

# நிவாரணப் பொருட்கள் வழங்கப்படவில்லை

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு பிரதேச மக்களுக்கு இதுவரை முதலாம்கட்ட நிவாரணப் பொருட்கள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளதாக இந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

யாழ்ப்பாண அரச அதிபர் – உடனடியாகப் பாதிக்கப்பட்ட தமக்கு நிவாரணப் பொருட்களை சீராகவும், முழுமையாகவும் கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு
கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு.
திருக்குறள்

# நமது நோக்கு

## ஜனாதிபதி என்னதான் செய்யப் போகிறாராம்..!

கொழும்பு விகாரமாதேவி பூங்காவின் திறந்த வெளி அரங்கில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க - சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மகளிர் அமைப்பின் மாநாட்டில் பேசியபோது வழங்கிய கருத்துக்கள் அவரின் ஆழ்மன விருப்பைக் காட்டுகிறதா அல்லது அவருக்கு ஏற்பட்டுவரும் சர்வதேச அழுத்தத்தின் பிரதிபலிப்பை வெளிப்படுத்தியுள்ளதா என்ற சந்தேகம் ஒருபுறம் இருக்க, இந்த அளவுக்காவது அவர் பேசுவதற்கு துணிந்துள்ளமைக்காக பாராட்டலாம்.

சமஷ்டி அடிப்படையில் அதிகாரப்பரவலாக்கல் திட்டத்தை மையமாகக் கொண்டு சமாதானப் பேச்சை தான் முன்னெடுக்கப் போவதாகவும், நாட்டின் இறைமை பாதிக்காத வகையில் வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் மக்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்படுவதை எவராலும் தடுக்க முடியாதெனவும் கூறியுள்ள ஜனாதிபதி சந்திரிகா -

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதை எதிர்க்கும் ஒரு சிறிய தொகையான குழுவினரே மீண்டும் யுத்தத்தை ஆரம்பித்து விடுதலைப்புலிகளை அதில் தோற்கடிக்க வேண்டும் என்று பேசி வருகின்றனர். யுத்தத்தில் நாம் நிச்சயமாக வெல்லவே முடியாது. வெல்லமுடியாதபோருக்கு தூண்டுவது தேசத்துரோகமாகும் என்று கூறியுள்ளார். இந்த பேச்சின் மூலம் சந்திரிகா சில விடயங்களை ஒப்புக் கொண்டுள்ளார். சில உண்மைகளை வெளிப்படையாக கூறியுமுள்ளார்.

முதலாவது, மீண்டும் யுத்தத்தை ஆரம்பிக்க அவரால் முடியாது என்பதையும் ஏற்கனவே யுத்தத்தில் தோல்வியுற்ற நிலையிலேயே அரசு உள்ளது என்பதையும் விடுதலைப்புலிகளுடனான யுத்தத்தில் இனி ஒரு போதுமே வெல்லமுடியாது என்பதையும் பகிரங்கமாகவே அவர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

அடுத்ததாக, சமாதானத்தை எதிர்ப்பவர்கள் ஒருசிறிய தொகையினர்தான் என்ற கருத்தைத் தெரிவித்துள்ள ஜனாதிபதி- இவர்களே போரை வலியுறுத்துகிறார்கள் என்றும் வெல்ல முடியாத போரை மேற்கொள்ள நிர்ப்பந்திக்கும் இந்தக்குழுவினர் நாட்டை மீண்டும் யுத்த பூமியாக்க முனைகின்றனர், அரசில் எம்மோடு இணைந்துள்ளனர். இவர்கள் இந்தப் போரை வலியுறுத்தும் செயற்பாடு தேசத்துரோகமாகும் - என்று கூறியுள்ள அவர். இதன் மூலம் அந்தக் குழுவினர் ஜே.வி.பியினர் தான் என்பதை தெளிவாகச் சுட்டிக்காட்டியுமுள்ளார் என்றால் அதில் சந்தேகமேயில்லை.

எனவே, இதன்மூலம் இன்றைய ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி அரசின் பிரதான பங்காளிகளாக இணைந்துள்ளவர்கள் தேசத்துரோக நடவடிக்கையாளர்கள் தான் என்பதை தென்பகுதி மக்களுக்கும், சர்வதேச சமூகத்திற்கும் வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளார் என்றே கூறவேண்டும்.

சமாதான விரோதிகளான - தேசத்துரோகக் கும்பலான - ஜே.வி.பியினரை வைத்துக்கொண்டு, இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காண்பதற்கு ஜனாதிபதியால் ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொள்ளமுடியுமா?

இந்தக் கேள்விக்கு விடை சொல்லவேண்டிய பொறுப்பு அவருக்கே உரியதாகும்.

இதேவேளை சமஷ்டிமுறையிலான அதிகாரப் பகிர்வு மூலம் தீர்வுகாண்பதற்கு நாட்டின் 80 சதவீதமான மக்கள் ஆதரவாக உள்ளனர் என்று கூறும் ஜனாதிபதி பிடிவாதப் போக்குடைய முரடர்கள் என்று தான் வர்ணிக்கும் ஜே.வி.பி குழுவினரின் மிரட்டல்களுக்கெல்லாம், கோரிக்கைகளுக்கெல்லாம் மௌனமாக ஒடுங்கிப்போவதுதான் இந்த ஓராண்டுகால ஐ.ம.சு. முன்னணி ஆட்சியால் ஒரு மில்லிமீற்றர் தானும் சமாதான முயறசிகளில் முன்னேற முடியாது போய்விட்டமைதான் காரணமாகும்.

சமாதான விரோதிகளின் - தேசத்துரோகிகளின் ஆதரவுடன் ஆட்சியை நடத்தும் ஐ.ம.சு முன்னணி அரசு தேச நலன்களைப் பேணிப் பாதுகாக்கும் என எவராலும் நம்பமுடியுமா?

அமைதி முயற்சிகளுக்கு எதிராகச் செயற்படுவோர் வெறும் 15 முதல் 20 சதவீதமானோரே எனக்கூறும் சந்திரிகா அம்மையார் - அவர்களைக் காட்டுக் கூச்சல் போடும் கும்பல் என கூறிவிட்டு அவர்களுடன் தொடர்ந்தும் உறவைப் பேணி வருவதன் நோக்கம் தான் என்ன?


அந்தக் கும்பலின் குணாதிசயங்களை மாற்றமுடியாது அவர்கள் அத்தகைய செயற்பாடுகளில் ஊறிப்போனவர்கள் என்று உண்மையாகவும், உறுதியாகவும் நம்புவாரேயானால் அவர்களைப் 'போங்கள் வெளியே' என்று கூறித் துரத்திவிடத் தயங்குவதேன்?

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சியில் தனக்குள்ள ஆர்வத்தை ஜனாதிபதி நிரூபிக்க வேண்டுமானால் முதலில் சமஷ்டி தீர்வைவிடவும் சாதாரணமானதும் அத்தகைய தீர்வொன்றுக்கான நடவடிக்கையை நம்பிக்கையுடன் தொடர அவசியமானதும் - அவசரமானதுமான இடைக்கால நிர்வாக அதிகாரசபை மற்றும் சுனாமி அனர்த்தம் காரணமாக பேரழிவுற்ற பகுதிகளில் மீள் நிர்மாணப் பணிகளை மேற்கொள்ள வசதியாக பொதுக்கட்டமைப்பு ஆகியவற்றை உருவாக்க நேர்மையான மனதுடன் முன்வரவேண்டும்.

அதனை விடுத்து வெறுமனே அறிக்கைகளை விடுப்பதில் அர்த்தமேதும் இருக்கப்போவது கிடையாது.

காலதாமதமும், இழுத்தடிப்பு உத்திகளும் பிரச்சினைகளையும், நெருக்கடிகளையும் அதிகரிக்கவே வகைசெய்யும் என்பதை ஜனாதிபதி உணர்வது காலத்தின் அவசியம் என்பதை இப்போதே வலியுறுத்தி வைக்கிறோம்.

# நாடும் நடப்பும்




# வட - கிழக்கு மாகாணத்தில் விசேட கல்வி நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அபிவிருத்தி தொடர்பாக கல்வி அமைச்சினால் விசேட நடவடிக்கை கள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன் ஒரு கட்டமாக வடக்கு - கிழக்கு பாடசாலைக ளில் 193 சிங்கள ஆசிரியர் நியமனமும் இடம்பெறவுள் ளதாகவும், இது குறித்து மாகாண அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சு விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை, வடக்கு - கிழக்கு பகுதிகளில் சிங்கள மாணவர்களுக்கு தமிழும், தமிழ் மாணவர்களுக்கு சிங்களமும் கற்பிப்பதற்கு தொண்டர் ஆசிரியர் நியமனம் தொடர்பாகவும் அமைச்சரவைப் பத்திரம் ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக வும் கூறப்படுகிறது.

அமைச்சரவை அங்கீகாரத்துக்கு முன்னதாக பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு இது தொடர்பான அவதானிப்புகளுக்கான கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இந்த வருடம் ஜூன் மாதம் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் நலன் கருதி, பாடக்குறிப்புகளை போட்டோ பிரதி எடுப்பதற்கான வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. இது தொடர்பாக அண்மையில் அமைச்சர் பேரியல் அஸ்ரப்புடன் நடத்திய சந்திப்பின் போது, இந்த விடயங்களைக் கவனிக்க அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ். தில்லை நடராஜா வடக்கு - கிழக்கு மாகாணப் பணிகள் தடை யின்றி நடைபெற கருமமாற்றுவார் எனத் தெரிவித்ததா கவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மருதமுனை மக்கள் போராட்டம் நேற்றுடன் கைவிடப்பட்டது!

சுனாமி அனர்த்தத்தால் இருப்பிடங்களை இழந்த அம்பாறை -மருதமுனை மக்கள் நேற்று இரண்டாவது நாளாகவும் வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த வீதிமறியல் போராட்டம் -கல்முனை பிரதேசம் முழுவதும் விரிவடைந்ததால், அந்தப் பிரதேசத்தின் இயல்புநிலை பாதிக்கப்பட்டது. வீதியில் கூடாரங் களை அமைத்து, வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபட்டதால் மட்டக்களப்பு - கல்முனை வீதியில் நேரடிப் போக்கு வரத்தும் தடைப்பட்டது.

இருப்பிடங்களை இழந்த குடும்பங்களுக்கு வீட மைப்பு வசதிகளை ஏற்படுத்துவதில் தொடர்ந்து ஏற்படும் தாமதங்கள், நிரந்தர வீடமைப்புக்குரிய காணிகள் இதுவரை அடையாளம் காணப்படாமை -

தமது மீள்குடியேற்றம், நிவாரணப் பணிகள் தொடர்பான நடவடிக்கைகளில் அரசியல்வாதிகளின் அசமந்தப்போக்கு ஆகிவற்றைக் கண்டித்தே இந்த வீதிமறியல் போராட்டம் நடைபெற்றது.

கல்முனைப் பிரதேசத்தின் தெற்குப்புற எல்லையான தரவைக் கோவில் சந்தி முதல், வடக்கு எல்லையான பெரிய நீலாவணை வரை சகல இடங்களிலும் 10 இற்கும் மேற்பட்ட இடங்களில் மக்கள் வீதிகளில் கூடா ரங்கள் அமைத்து இந்த மறியற் போராட்டத்தில் ஈடு பட்டனர்.

எனினும் இந்த வீதி மறியல் போராட்டம் நேற்றுமாலையுடன் முடிவுக்கு வந்தது. இதனையடுத்து மட்டக் களப்பு - கல்முனை வீதியூடான போக்குவரத்து சேவைகள் வழமைக்குத் திரும்பின.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் கேரத் அபய ரத்ன வீதிமறியல் போராட்டம் நடத்திய பிரதேசங் களுக்கு நேற்று விஜயம் செய்து ஆர்ப்பாட்டகாரர்களுடன் நடத்திய பேச்சுக்களின் போது வழங்கிய உறுதி மொழியை அடுத்தே இந்தப் போராட்டம் கைவிடப்பட் டது.

இருப்பிடங்களை இழந்த குடும்பங்களுக்கான மாற்றுக்குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்குரிய காணிகள் அடையாளம் காணப்பட்டு உரியவர்களிடம் இருந்து சட்டரீதியாகப் பெறும் நடவடிக்கைகள் இருவார காலத்துக்குள் பூர்த்திசெய்யப்படும் என்றும் அதன் பின்பு நிரந்தர குடியிருப்பு வசதிகள் மக்களின் கருத்துக்ளைப் பெற்று அமைக்கப்படும் என்றும் அரசாங்க அதிபர் உறுதிய ளித்தார்.

ஒவ்வொரு கிராமத்திலும் குடியேற்றம், புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவதற்கு 15 பேர் கொண்ட குழுவொன்றும் நியமிக்கப்பட்டது.

கடல் பாதுகாப்பு வலையத்தை 200 மீற்றரில் இருந்து 100 மீற்றராக குறைப்பதன் மூலம் காணி தொடர்பான பிரச்சினைகளுக்கு இலகுவான தீர்வொன்றைக் காண முடியுமென பொதுமக்களால் யோசனை முன்வைக்கப் பட்ட போதும் இது தொடர்பான முடிவுகளை அரசாங் கம்தான் எடுக்கவேண்டுமென அரவர் மேலும் தெரிவித் தார்.

## பண்டத்தரிப்பு பட்டினசபை அலுவலகத்துக்கு தொலைபேசி இணைப்பு வழங்குமாறு கோரிக்கை

வலி. தென் மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்புப் பட்டின உப அலுவலகத்திற்கு தொலைபேசி இணைப்பு வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

இது குறித்து வலி. தென் மேற்கு பிரதேசசபை உள்ளூராட்சி உதவியாளர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் -

வலி. தென் மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியிலுள்ள பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம் ஒரு பரந்த பிரதேசமாகும். இங்குள்ள மக்களுக்கு பல்வேறுபட்ட சேவைகளை மேற்கொள்வதற்கு தொலைபேசி இணைப்பு வழ்ங்குமாறு யாழ். பிராந்திய ரெலிக்கொம் அதிகா ரிக்கு பலமுறை விண்ணப்பித்திருந்தும் - எதுவித பலனும் கிடைக்கவில்லை.

கடந்த காலங்களில் எமது சபைத் தலைவருக்கு வழங்கப்பட்ட 021 - 222 2689 இணை - ஆர்எல் இணைப் பாக வழங்கப்பட்டபோதும் இதுவரையில் பதில் இல்லை. எனவே இந்த விடயத்தை யாழ். அரசாங்க அதிபர், ஆளுநர் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வாசகர் நோக்கு

யாழ். மாநகரசபையின் எல்லைக்குட்பட்ட - யாழ்ப்பாணம் நவீனசந்தை கட்டடத்தொகுதியின் நடுவில் அமைந்துள்ள குடிநீர்க் குழாய்கள் உள்ள இடங்களில் குளிக்கும் மாநகரசபை சுத்திகரிப்பாளர்களால் கடைகளில் நிற்போரும், கடைகளுக்கு வருவோரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

சுத்திகரிப்புத் தொழில் முடிந்ததும் குடிநீர்க் குழாய்களில் குளிக்கும்போது கூச்சல், கும்மாளமிடுவதுடன், வியாபார ஸ்தாபனங்களில் நிற்போரை வேறு இடங்களில் தண்ணீர் அள்ளச் சொல்லிக் கூறுகின்றனர்.

நீச்சலுடையில் பொது இடங்களில் குளிப்பதால், கடைகளில் நின்று வேலை செய்யும் பெண்கள் அசௌகரியங்களுக்குள்ளாகின்றனர்.

ஆகவே இவர்கள் குளிப்பதற்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் நின்று குளிக்க உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.


அலெக்ஸ்
யாழ்ப்பாணம்.

அரசியற் கட்டுரை

சிலம்பு

# அரசியல் சூறாவளிக்குள் சிக்கியுள்ள சுனாமி அவலங்கள்







(நேற்றைய தொடர்ச்சி)

தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளைக் கேட்கும் பொழுது விட்டுக் கொடுக்க வேண்டும் என்று என்ன அடிப்படையில் கேட்கிறார்கள்? சிங்கள மண்ணைத் தமிழர்கள் ஆக்கிரமித்திருந்தால், விட்டுக் கொடுப்பை மேற்கொள்ளவேண்டும் என்று கூறுவதில் நியாயம் இருக்கலாம். ஆனால், இங்கு தமிழினம் தனது உரிமைகளுடன் வாழ மாத்திரமே விரும்புகிறது. சிங்கள மக்களுக்குள்ள உரிமைகளைப் பறிக்கவோ, குறைக்கவோ தமிழினம் விரும்பவில்லை. தமிழர் தரப்புச் சுயநிர்ணய உரிமையுடைய இனம் என்பதை விட்டுக் கொடுத்துப் பேசுவதுதான் விட்டுக் கொடுப்பா?

அதேபோல் இடைக்கால தன்னாட்சி அலகு பற்றிய விட்டுக் கொடுப்பு ஏற்புடையதாகுமா? சுனாமி நிவாரணமே முழுமையாகச் சென்றடையாத நிலையில், இடைக்காலத் தன்னாட்சி அலகின் தேவை வலுவாக உறுதிப்படுத்தப்படுகிறது. இந்தக் கட்டமைப்பு இருந்திருந்தால், தமிழர் தாயகத்தைச் சிங்களம் புறக்கணிக்க முடியாதநிலை ஏற்பட்டிருக்கும். அது மாத்திரமல்ல, அனைத்துப் பணிகளும் மிகவிரைவாக மேற்கொள்ளப்பட்டு, மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பியிருப்பர். இவற்றையே இன்றைய நிலைமை எடுத்துக்காட்டி நிற்கிறது.

சந்திரிகா அரசு - பலமில்லாத அரசு. ஜே.வி.பி பொதுக்கட்டமைப்புக்குள் விடுதலைப் புலிகள் இணைக்கப்படுவதை எதிர்க்கிறது. எனவே தமிழர் தரப்பு விட்டுக்கொடுப்புடன் நடக்க வேண்டும். இவ்வாறு கூறுபவர்கள் - புலிகள் வலுவான ஒரு சக்தி, அவர்களையும் இணைத்துத் தான் நடக்க வேண்டும் எனவும், அதற்காக ஜே.வி.பி விட்டுக்கொடுப்புடன் நடக்க வேண்டும். சிஹல உறுமய விட்டுக்கொடுப்புடன் நடக்க வேண்டும் என்று எழுதுவார்களாயிருந்தால், வரவேற்கக்கூடியதாக இருக்கும். சந்திரிகாவின் அரசு கவிழ்ந்து விடும். ஆகவே தமிழர் தரப்பு விட்டுக் கொடுப்புடன் நடக்க வேண்டும் என்பதில் நியாயத் தன்மை ஏதுமில்லை.

பேரினவாதிகளினதோ, பேரினவாதச் செய்தி ஊடகங்களின் சிந்தனையிலோ மாற்றங்கள் ஏற்படப் போவதில்லை. ஜே.வி.பி, ஹெல உறுமய ஆகியவற்றைப் பாவித்துத் தமிழர் தரப்புக்குக் கிடைக்கவேண்டியவை கிடைக்காமற் செய்வதே அரசினதும், பேரினவாதிகளினதும் நோக்கமாகும்.

தமிழ் மக்களின் உறுதியான நிலைப்பாடு அரசுக்கு நன்கு தெரியும். தமிழ் மக்களை சுனாமி நிவாரண நிதியை வைத்து விலைக்கு வாங்க முடியாது. எனவே அவர்களைக் கைவிட்டுவிட்டுச் சிங்கள மக்களுக்கு நிவாரணங்களை வழங்கி, அது அரச உதவி என்றில்லாமல், ஆளும் கட்சியின் உதவி என்று காட்டி, அரசியல் இலாபம் தேடும் நடவடிக்கையே தற்பொழுது மேற்கொள்ளப் பட்டு வருகிறது. இதனால் ஐ.தே. கட்சி ஒரு புறம் அரசின் செயலைக் கண்டிக்கிறது. தானாகச் சில வீட்டுத் திட்டங்களை முன்னெடுக்கிறது. ஐக்கிய தேசியக்கட்சித் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க நோர்வே, பெல்ஜியம், ஐரோப்பிய ஒன்றியம், பிரித்தானியா ஆகிய இடங்களுக்குச் சென்று, பரப்புரை செய்து வருகிறார். வரப்போகும் ஜனாதிபதித் தேர்தலை மையமாகக் கொண்ட நடவடிக்கை இதுவாகும்.

ஆட்சியில் பங்கு கொண்டுள்ள ஜே.வி.பி - சுனாமி நிவாரணத்தால் சிறிலங்கா சுதந்திரக் கட்சி இலாபம் ஈட்டு வதைத் தடுக்க வேண்டும். ஜே.வி.பியின் பலத்தை அதிகரிக்க சுனாமியை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதில் அது அக்கறை கொண்டுள்ளது.

மொத்தத்தில் சுனாமி மக்களுக்கு ஏற்படுத்திய அழிவில் இருந்து மீட்பதிலுள்ள அக்கறையிலும் பார்க்க, அரசியல் கட்சிகள் தங்கள் அரசியல் ஆதாயத்தில் அதிக அக்கறை கொணடுள்ளனகள் என்பதுதான் உண்மை. இதனால் தான் ஜே.வி.பிக்கும். சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குமிடையில் குடுமிபிடிச்சண்டை நடக்கிறது. நிவாரணத்தைக் காட்டி, அரசியல் ஆதாயம் பெறுவதிலே தான் முனைப்புடன் இருக்கிறார்கள். இதற்காகத் தமிழ் மக்களைப் பகடைக் காய்களாக்குகின்றனர் இவர்கள். அரசு கவிழ்ந்து விடும். எனவே, நாம் போடும் பிச்சையை ஏற்றுக் கொள்ளுங்கள் என்பதுதான் சிங்களத்தின் கூற்றாகும்.

இவையெல்லாம் உலக நாடுகளுக்கு ஒன்றைத் தெளிவாக எடுத்துக்காட்டிவருகின்றன. சிங்கள அரசுகள், தமிழ் மக்களுக்கு உரிய இடம் கொடுக்கப் போவதில்லை. தமிழ் மக்களது கோரிக்கைகளை இதுவரை சிங்களம் காட்டியது போல், பயங்கரவாதம் என்று ஏற்கமுடியாது. தமிழ் மக்கள் தம்மைத் தாமே ஆளும் திறன் கொண்டவர்கள். அவர்களுக்குச் சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்ளும் காலம் விரைந்து வந்து கொண்டிருக்கிறது.

தெற்கில் அரசியல் சூறாவளிக்குள் சிக்கிய 'சுனாமி' - தமிழர் தாயகத்தின் அழிவிலும் நல்லதையே உலகுக்குக் காட்டிச் சென்றுள்ளது. அதுதான் தமிழர் தாயகத்தின் விடுதலையையும் உலகத்துக்கு காட்டியுள்ளது.

பகுதி 57

சங்கர்

# காற்றே நீ எம் கதை கேளாயோ... அலையே நீ எம் நிலை உணராயோ...

இது சம்பந்தமாக நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் நான் நிலைமையை விளக்கியுள்ளேன். திருமலையில் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் குறித்து, திருமலையிலேயே தீர்மானிக்கப்பட வேண்டும். மேலும் திருமலையிலுள்ளோராலேயே தீர்மானிக்கப்பட மிகவும் கரிசனையாகவுள்ளது. குறிப்பாகத் தமிழ் பேசும் மக்களுககு நலம் வழங்கப்படக்கூடாது என்பதை நோக்காகக் கொண்டு; மாடி வீட்டுத் திட்டத்தை சிபாரிசு செய்துள்ளார்கள் அவர்கள். ஆனால் இந்தத் திட்டத்துக்கு நாம் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்துள்ளோம்.



வேண்டும். இதற்கென உடனடி நிவாரணப் பணிக்கென ஒரு குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்தக் குழுவில் படையினர், தமிழீழ விடுதலைப் புலிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிபர்,அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தலைவர், வெளிநாட்டு நிறுவனங்களின் பிரதிநிதி எனப் பதினொருபேர் அங்கம் வகிக்கின்றனர். மேலும் ஐந்து உபகுழுக்கள் உள்ளன. இதில் எமது பிரதிநிதிகளும் அங்கம் வகிக்கின்றனர்.

இதேவேளை இந்த உடனடி நிவாரணப் பணிக்குழுவில் ஈ.பி.டி.பியின் பிரதிநிதியொருவரையும் நியமித்து, ஜனாதிபதி சந்திரிகா நேரடியாகக் கடிதம் கொடுத்து அனுப்பியுள்ளார். அந்தக் கடிதத்தில் இவர் தமது பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவரது பெயர் - டொக்டர் விக்னேஸ்வரன்.

இதேவேளை வீட்டுத் திட்டங்களை அமைப்பது தொடர்பில், தொடர்ந்து முரண்பாடுகள் ஏற்பட்ட வண்ணமேயுள்ளது. திருமலையில் பாதிக்கப்பட்டோர் தமிழ் பேசும் மக்களே. ஆனால் தமிழ் பேசும் மக்கள் இதனால் நன்மை அடைந்து விடக்கூடாது என்பதில் ஜே.வி.பி

மாடி வீடு கட்டும் திட்டம் இருந்தால், அதனை நீங்கள் வேறு இடங்களில் நடைமுறைப்படுத்துங்கள். இங்கு 100 மீற்றர் தூரத்துக்கு அப்பால் கட்டடங்கள் அமைக்கப்பட வேண்டுமென்ற அறிவிப்பால் பாதிக்கப்படும் அனைவருக்கும் காணியே வழங்க வேண்டும் என்பதை நான் வலியுறுத்தினேன். இந்த மக்கள் ஏற்கனவே குடியமர்ந்த காணிகளுக்கு அண்மித்த பகுதிகளில், இனங்காணப்பட்ட அரச காணிகளில் இதற்கென காணி அளத்தல் முதலான பணிகள் தற்போது நடைபெறுகின்றன.

இவ்வாறு எழிலன் விளக்கமளித்ததும் 'சுனாமியை சாட்டாக வைத்து, லிங்கநகர் தமிழ்மக்களை அங்கிருந்து வெளியேற்றப் படையினர் முயல்வதாகச் செய்திகள் அடிபட்டனவே?' எனக் கேட்டேன்.

அதற்கு அவர் 'அங்கு மலையில் இருந்தவர்களை எழுப்பப் படையினர் முயற்சித்தனர். இந்த விடயம் தொடர்பாக அந்தப் பகுதி மக்கள் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தனர். இதனைத் தொடர்ந்து - சுமார் ஐம்பது பேருக்கு காணிகள் அளந்து, அதற்கான உரிமங்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. கடந்த நான்கு நாட்களுக்கு முன்னர் ஒரு படைஅதிகாரி அந்தப் பகுதி மக்களை கூட்டம் என்ற பெயரில் அழைத்து, சுனாமியின் பெயரால் உங்களுக்கு வேறு இடத்தில் காணி வழங்குகிறோம். இங்கிருந்து நீங்கள் வெளியேறவேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். ஆனால், அந்தப் பகுதியில் சுனாமியால் மக்கள் பாதிக்கப்படவில்லை. ஏனெனில் இது மலைப்பகுதி.

ஆனால் மக்களோ தாம் அங்கிருந்து வெளியேறப் போவதில்லை என்பதை உறுதியாகத் தெரிவித்துள்ளனர். இந்தவிடயம் தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் நான் முறைப்பாடு செய்துள்ளேன்' எனப் பதிலளித்தார்.

'நிவாரண நடவடிக்கைகள் எந்த அளவில் உள்ளன?' எனக் கேட்டதற்கு 'நிவாரண நடவடிக்கைகளைப் பொறுத்தவரை 15 நாட்களுக்குப் பின்பே அரசின் நிவாரண உதவிகள் கிடைத்தன. அதுவும் உலக உணவுத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டவற்றையே அரசு வழங்கியது. அதுவும் அரிசியும், பருப்பும், சீனியும் தான். இருவாரங்களுக்குரிய பொருட்கள் இவ்வாறு வழங்கப்பட்டன.

தற்போதுதான் 375 ரூபா பெறுமதியான நிவாரண முத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் இருநூறுரூபா பணமாகவும், நூற்றி எழுபத்தைந்து ரூபாவுக்கு பொருட்களாகவும் வழங்கப்படுகிறது. உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கான கொடுப்பனவும் இன்னமும் வழங்கப் படவில்லை. அது சம்பந்தமாக கச்சேரியில் நடைபெற்ற கூட்டத்தில நான் எடுத்துரைக்கவே, உடனடியாக வழங்கப்படுமெனவும் அது தொடர்பாக தரவுகள் பூர்த்தியாக்கப்படவேண்டும் எனவும் கூறினர். அதற்கு நான், 1026 பேர் மரணமாகியுள்ளதாக ஏற்கெனவே உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. எனவே அவ்வளவு பேருக்கும் கொடுப்பனவை வழங்கலாம் எனக் கூறினேன். ஏனெனில் சவப்பெட்டி எடுத்திருந்தால் அதற்குரிய சிட்டை, சவக் கிரியை செய்திருந்தால் அதற்குரிய சிட்டை எல்லாம் தேவை எனக் கூறினர். ஆனால் அதெல்லாம் தேவையில்லை. உயிரிழந்தோருக்கு கொடுப்பனவு வழங்குவதென்பது அரசின் முடிவானால் அதனைச் செயற்படுத்துங்கள் என்றேன். எனக் குறிப்பிட்டார்.

'தென்னிலங்கையிலும் இவ்வாறு சவப்பெட்டிச் சிட்டை, கிரியைச் சிட்டை கோரினார்களா?' என நான் கேட்டதற்கு, 'அங்கு அப்படியொன்றுமில்லை. அங்கு ஏற்கெனவே உயிரிழந்தோருக்கான கொடுப்பனவு வழங்கல் பத்தாவது நாளே பூர்த்தியாகிவிட்டது. அந்தத் தகவலை நான் முழுமையாகப் பெற்றபின்னரே கச்சேரிக் கூட்டத்தில் சவப்பெட்டிச் சிட்டை, கிரியைச் சிட்டை கோருவது தவறு எனக் குறிப்பிட்டேன் . இதன் பின்னரே மரணம் என்பது உறுதிப்படுத்தப்பட்டால், கொடுப்பனவை வழங்குவதாக ஒத்துக் கொண்டார்கள். என அவர் கூறினார்.

'விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிகளில் பாதிப்புற்றோர் தொடர்பாக முறைப்பாடுகள், பதிவுகள் மேற்கொள்ளப்படுவது எந்த ஒழுங்கில் நடைபெறுகின்றது?' எனக் கேட்டதற்கு 'குறிப்பிட்ட சில கிராமங்கள் மட்டுமே எமது கட்டுப்பாட்டுப் பகுதியில் பாதிப்புற்றுள்ளமையால், இங்கு இது தொடர்பான பதிவுகளைக் கிராமசேவை அலுவலர்களே மேற்கொள்ளலாம் எனக் குறிப்பிட்டோம்.

(தொடரும்...)

# தவக்கால நற்சிந்தனை

## 'மரியாளோ நல்ல பங்கைத் தேர்ந்தெடுத்துக் கொண்டாள்' (லூக் 10:42)

மோ.தார்சீசியஸ்



நம் வாழ்வில் நாம் சந்திக்கும் இழப்பும்,ஆதாயமும் இயல்பாக வருபவை. ஏதாவது ஒன்றை ஆதாயமாக்க ஏதாவது ஒன்றை இழந்துதான் ஆக வேண்டும். ஆனால் எதை இழக்கிறோம், எதை ஆதாயமாக்கிறோம் என முடிவு செய்ய வேண்டிய சந்தர்ப்பத்தை இறைவன் நமக்கு வழங்கியுள்ளார். மரியா இயேசுவின் காலடியில் அமர்ந்து, அவர் இதயத்தோடு சங்கமமாகிவிட்டாள். ஏனெனில் இறைவனோடு இணையாத வாழ்வும், பணியும் பயனற்றவையே என உணர்ந்தவராய்த் திகழ்கிறார். மார்த்தாவும் இயேசுவின் மீது அன்பு கொண்டவர் தான். ஆனால், அவருக்கு அறுசுவை உணவைத் தயாரிப்பதிலேயே கவனம் செலுத்தினார். மரியாவைப் போல இயேசுவின் பாதம் அமர்ந்து, அவரோடு உரையாடக் கற்றுக் கொள்ளவில்லை. இறையரசுக்காக சிலவற்றை இழக்க முன்வரும் ஒருவர் நிறைவாக இறையாசீர் பெற்றுக் கொள்வர் என்கிறார் இயேசு.

## துப்பாக்கி சூட்டுக்காயங்களுடன்

# ஈராக்கின் மேற்கு நகரில் 41 சடலங்கள் மீட்கப்பட்டன



ஈராக்கின் மேற்கு நகரான குவாமில் 41 பொது மக்களின் சடலங்கள் சூட்டுக்காயங்களுடன் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சடலங்கள் அனைத்தும் சாதாரண சிவில் உடையில் கிடந்ததாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன. இவர்கள் அனைவருக்கும் அருகில் நின்று ஆயுதபாணிகள் அவர்களது தலையிலும், நெஞ்சுப் பகுதியிலும் துப்பாக்கிச்சூட்டை நடத்தியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சடலங்களில் ஒன்றில் பொலிஸார் ஒருவரது அடையாள அட்டை இருந்து மீட்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சிரச்சேதம் செய்யப்பட்ட நிலையில் சிறுவர்கள், பெண்கள் உட்பட 15 பேரது சடலங்கள் கைவிடப்பட்ட இராணுவமுகாமொன்றிலிருந்து மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனக் கருதப்படுவோர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இவர்கள் கிளர்ச்சிவாதிகளெனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனிடையே தலைநகர் பாக்தாத்திலுள்ள விவசாய அமைச்சுக்கு நெருக்கமாக கிளர்ச்சிவாதிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதலில் மூவர் கொல்லப்பட்டதுடன் சுமார் 20 பேர் காயமடைந்துள்ளனர். இந்தத் தாக்குதலில் அமைச்சக் கட்டடம் தீப்பற்றிக்கொண்டதாகவும் தகவல்கள் தெரிவித்தன.

கிளர்ச்சிவாதிகளின் இலக்கு அமைச்சுக் கட்டடத்திற்கு அருகிலுள்ள சடீர் ஹோட்டலாக இருக்கலாமென பொலிஸார் தெரிவித்தனர்.

ஏனெனில் இந்த ஹேட்டலை ஈராக் பொலிஸாரும் வெளிநாட்டு ஒப்பந்தகாரர்களும் பாவிப்பதே காரணமெனவும் பொலிஸார் தெரிவித்தனர்.


இவற்றைவிட பஸ்ராவில் வீதியோரம் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் பொலிஸார் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மூவர் காயமடைந்தனர்.

பாக்தாத்திலுள்ள அல்புராத் வைத்தியசாலைப் பணிப்பாளரான டொக்டர் அடில் அப்ட் அல் ரீம் என்பவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக அல் - அராபிய தொலைக்காட்சி தெரிவித்தது.

கடந்த முதலாம் திகதி கடத்தப்பட்ட பொலிஸ் அதிகாரியின் மகனொருவர் நேற்றுமுன்தினம் சூட்டுக் காயங்களுடன் மொசூல் பகுதியில் சடலமாக மீட்கப்பட்டார்.




## டெஸ்ட் போட்டியைப் பார்க்க முஷாரப் இந்தியா வருகிறார்



இந்திய - பாகிஸ்தான் இடையேயான டெஸ்ட் தொடரின் ஒரு ஆட்டத்தைக் காண பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப் இந்தியா வரவுள்ளதாக இந்தியப் பிரதமரின் ஊடக ஆலோசகர் சஞ்சய் பாரு தெரிவித்தார்.

டெல்கியில் நேற்று பத்திரிகையாளர்களுக்குப் பேட்டியளிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். கிரிக்கெட் போட்டியைப் பார்க்க இந்தியா வரும் முஷாரப்பை வரவேற்பதில் இந்தியா மகிழ்ச்சியடைவதாகவும், முஷாரப்பிற்கு பாதுகாப்பளிப்பது குறித்து இந்திய வெளியுறவுத் துறை, பாகிஸ்தான் அரசுடன் கலந்துரையாடி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

கிரிக்கெட் ரசிகரான முஷாரப் - பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் ஆலோசகராகவும் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த ஆண்டு இந்திய அணி பாகிஸ்தான் சென்றபோது ஒரு நாள் போட்டியை முஷாரப் பார்த்து ரசித்தமையும் குறிப்பிடத்தக்கது.

# சீனா - தாய்வான் இடையே பதற்றநிலை அதிகரிப்பு!

சீனாவுக்கும் - தாய்வானுக்கும் இடையே கடந்தசில ஆண்டுகளாகப் பதற்றநிலை அதிகரித்துவருகிறது.

தாய்வானில் ஜனாதிபதி மற்றும் தனி நிர்வாக அமைப்பு இருந்தாலும் - அது சீனாவின் ஒருங்கிணைந்த பகுதிதான் என்று சீனா கூறிவருகிறது. ஆனால் இதனை தாய்வான் ஏற்கவில்லை.

இந்த நிலையில் சீன நாடாளுமன்றத்தில் புதிய சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. தாய்வானைத் தனி நாடாக அறிவிக்கக்கூடாது, அது சீனாவின் ஒரு பகுதிதான். ஆனால், தனி நிர்வாகத்துக்கு மட்டுமே அனுமதிக்கவேண்டும். தாய்வானை தனி நாடாக அறிவித்தால் அதன்மீது சீனா தாக்குதல் நடத்தலாம் என்று புதிய சட்டம் கூறுகிறது. இதற்குச் சீன நாடாளுமன்றத்தில் அனுமதியும் கிடைத்துள்ளது.


தாய்வானுடன் நடத்தப்படும் அனைத்து சமரச முயற்சிகளும் தோல்வியடைந்தால் மட்டுமே இராணுவ பலத்தைப் பயன்படுத்துவோம் என்று சீனா கூறியுள்ளது.

ஆனாலும், இரு நாடுகளுக்கும் இடையே பதற்றநிலை அதிகரித்தேவருகிறது. இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டால் தாய்வானிலுள்ள பொதுமக்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளையும் சீனா கவனிக்கும் என்று சீன நாடாளுமன்ற துணை சபாநாயகர் வாவ் ஷாங்கோ கூறியுள்ளார். எனினும், சீனா தனது நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியுள்ள பிரிவினை தடுப்புச் சட்டத்தை தாய்வான் ஏற்றுக்கொள்ளவில்லை. இது தாய்வான் மக்களின் உரிமையைப் பறிக்கும் சட்டம். இதை ஏற்கமுடியாது என்று தாய்வான் கூறியுள்ளது.

ஏற்கனவே தாய்வான் எல்லையில் ஏவுகணைகளை சீனா தாராளமாக தயார் நிலையில் வைத்துள்ளது. இதனால் எந்த நேரமும் தாய்வான்மீது சீனா தாக்குதல் நடத்தலாம் என்ற பதற்றமான சூழ்நிலை உருவாகியுள்ளது.

## பலஸ்தீன நிலப்பகுதிகளில்

# இஸ்ரேல் அரச நிர்வாக ஆதரவுடன் சட்டவிரோத யூத குடியிருப்புகள்



மேற்குக்கரைப் பகுதியில் சட்டவிரோதமாக யூதக்குடியிருப்புக்களை அமைப்பதற்கு இரகசியமான முறையில் இஸ்ரேல் அரசநிர்வாகம் உதவிகளைப் புரிந்துவருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவ்வாறான சட்டவிரோத குடியிருப்புக்கள் அமைக்கப்பட்டமை தொடர்பாக பூரண விசாரணை நடத்துமாறு இஸ்ரேலின் முன்னாள் நீதிபதி தாலியா சாசன் தெரிவித்தார்.

அமெரிக்காவின் பின்புலத்துடன் பாதை வரைவு எனும் திட்டத்தின் அடிப்படையில் பலஸ்தீன நிலப்பகுதிகளிலுள்ள சட்டவிரோத யூதக் குடியேற்றங்களை அகற்றுவது குறித்து பேச்சுக்கள் நடைபெற்றுவரும் வேளையில் இவ்வாறான சம்பவம் இடம்பெற்றுவருவதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகள் அமைக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவித்தன. இந்தத் திட்டத்துக்கு இஸ்ரேலின் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் மிகவும் இரகசியமான முறையில் உதவிவந்துள்ளன.

தற்போதைய பிரதமரான ஷரோன் முன்னர் வெளியுறவு அமைச்சராக இருந்தவேளை இந்தக் குடியிருப்புக்களை அமைப்பதற்கு ஊக்கமளித்துவந்ததாகவும் இதன்மூலம் பலஸ்தீன அரசொன்றை உருவாக்கும் திட்டத்தைத் தடுக்கலாம் என்பதே நோக்கமெனவும் தெரிவிக்கப்பட்டது.

சுமார் 400 நடமாடும் வீடுகளை பலஸ்தீன நிலப்பகுதிகளில் அமைப்பதற்கு இஸ்ரேலிய வீடமைப்பு அமைச்சு வழங்கியுள்ளது. இந்தப் பகுதிகளிலுள்ள ஆரம்பப்பாடசாலை ஆசிரியர்களுக்கு கல்வியமைச்சு ஊதியத்தை வழங்கிவருகின்றது. அத்துடன், மின்சக்தி அமைச்சு இந்தப்பகுதிகளுக்கான மின்விநி யோகத்தை மேற்கொண்டுள்ளது. வீதிகள் அமைப்பதற்கும் உதவிகள் செய்யப்பட்டு வருகின்றது.

# செச்சின்ய போராளிக்குழுத் தலைவர் நேற்று முன்தினம் சுட்டுக்கொலை!



ரஷ்ய இராணுவம் நடத்திய தாக்குதலில் செச்சின்ய போராளிக்குழுவின் தலைவர் மஸ்கதோவ் (வயது-53) பலியானார். செச்சின்ய கிராமம் ஒன்றின் சுரங்க அறையொன்றில் இவர் பதுங்கி இருந்ததாக தகவலொன்று கிடைத்ததையடுத்து ரஷ்ய இராணுவத்தினர் நடத்திய தாக்குதலிலேயே அவர் கொல்லப்பட்டார்.

1997 ஆம் ஆண்டு செச்சின்யாவில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் மஸ்கதோவ் வெற்றி பெற்றார். எனினும் செச்சின்யாவில் தனிநாடு கோரிப் போராடிய மஸ்கதோவ் தலைமையிலான போராளிக்குழுக்களை அடக்குவதற்கு ரஷ்ய இராணுவம் செச்சின்யாவிற்கு அனுப்பப்பட்டபோது அவர் ஜனாதிபதி பதவியிலிருந்து நீக்கப்பட்டார். இதன்பின்னர் இவர் தலைமறைவு வாழ்க்கையை நடத்தி செச்சின்ய விடுதலைக்கான போராட்டத்தை நடத்தி வந்தார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இவர் செச்சின்யாவில் குரோஸ்னி அருகே கிராமமொன்றில் சுரங்க அறையொன்றில் பதுங்கி இருப்பதாக கிடைத்த தகவலையடுத்து ரஷ்ய இராணுவத்தினரும், பொலிஸாரும் அந்த இடத்தைச் சுற்றிவளைத்து தாக்குதல் நடத்தினர். இதன்போது செச்சின்ய போராளிகளும் பதில் தாக்குதலை நடத்தினர். நீண்ட நேரமாக நடைபெற்ற இந்தத் தாக்குதலையடுத்து மஸ்கதோவ் சுட்டுக் கொல்லப்பட்டார்.

எனினும், மஸ்கதோவின் மெய்ப் பாதுகாவலர்களே அவரை தவறுதலாக சுட்டுக்கொன்றதாக மற்றொரு தகவல் தெரிவித்தது. சுட்டுக்



கொல்லப்பட்ட மஸ்கதோவின் சடலம் ரஷ்ய இராணுவத்தினரால் மீட்கப்பட்டது.

இதேவேளை, மஸ்கதோவ் சுட்டுக்கொல்லப்பட்டாலும் செச்சின்ய விடுதலைக்கான போர் தொடருமெனவும் தமது போராளி அமைப்பிற்கு விரைவில் புதிய தலைவரொருவர் தேர்ந்தெடுக்கப்படுவாரெனவும் செச்சினிய போராளிக் குழு அமைப்பினைச் சேர்ந்த அகமட் சகாயேவ் தெரிவித்தார்.

# நியூயோர்க் தாக்குதல் 11 என்ற எண்ணின் அதிசயம்

நியூயோர்க் நகர இரட்டைக் கோபுரம் மீது அல்கொய்டா அமைப்பினர் நடத்திய தாக்குதலில் சம்பந்தப்பட்ட 11 என்ற எண்ணின் அதிசயத்தை ஒருவர் வரிசைப்படுத்தியுள்ளார்.

அந்த விபரம் வருமாறு-

தாக்குதல் நடந்தது 9 ஆவது மாதம் 11 ஆம் திகதி அதன் கூட்டுத் தொகை 9+1+1 =11.

செப்ரெம்பர் 11 என்பது ஆண்டின் 254 ஆவது நாள் 2+5+4= 11.

செப்ரெம்பர் 11 ற்குப்பிறகு ஆண்டில் மீதமிருக்கும் நாட்கள் 111.

இரட்டைக் கோபுரத்தின் தோற்றம் 11 போல இருந்தது.

கோபுரத்தில் மோதிய முதல் விமானம் பிளைட் எண்11 ஆகும்.

நியூயோர்க் நகரம் என்ற ஆங்கில எழுத்து எண்ணிக்கை11ஆகும்.

அமெரிக்காவில் நியூயோர்க் 11 ஆவது மாகாணமாகச் சேர்க்கப்பட்டது.

கோபுரத்தில் மோதிய பிளைட் எண் 11 விமானத்தில் இருந்த பயணிகள் எண்ணிக்கை 92. அதாவது 9+2=11.

அடுத்து மோதிய பிளைட் எண் 77 இல் இருந்த பயணிகள் 65. அதாவது 6+5=11.

ஆப்கானிஸ்தான் என்ற ஆங்கில எழுத்து எண்ணிக்கை 11.

ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் என்ற ஆங்கில எழுத்து எண்ணிக்கை 11. மேற்கூறப்பட்ட ஆச்சரியங்களின் எண்ணிக்கையும் 11 என அவர் தனது பட்டியலில் தெரிவித்துள்ளார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பாகிஸ்தான் விமானப்படைத் தளபதி 3 நாள் விஜயமாக இலங்கை வருகை

பாகிஸ்தான் விமானப்படைத் தளபதி எயார் சீவ் மார்ஷல் கலீம் சதாத் மூன்று நாள் விஜயமாக நேற்று அதிகாலை கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தார்.

இவரை விமானப்படைத் தளபதி எயார் வைஸ் மார்ஷல் டொனால்ட் பெரேரா வரவேற்று விமானப் படைத் தலைமையகத்துக்கு அழைத்துச் சென்றார். அங்கு பாகிஸ்தான் விமானப்படைத் தளபதிக்கு அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது.

விமானப்படைத் தலைமையகத்தில் இருநாடுகளினதும் விமானப்படைத் தளபதிகளும் விரிவான பேச்சுவார்த்தைகளை நடத்தினர். இதன்போது இரு விமானப் படைகளுக்கும் இடையில் நெருக்கமான உறவின் மூலம் இருதரப்புக்களையும் வலுப்படுத்துவது குறித்து ஆராயப்பட்டது.

இதன் பின்னர் கடற்படைத்தலைமையகத்தில் வைத்து – கடற்படைத் தளபதியும் கூட்டுப் படைகளின் தளபதியுமான வைஸ் அட்மிரல் தயா சந்தகிரியையும், இராணுவத் தலைமையகத்தில் பதில் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவையும் மற்றும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் உள்ளிட்ட பலரையும் பாகிஸ்தான் விமானப் படைத் தளபதி சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இலங்கையில் தங்கியிருக்கும் காலத்தில் பாகிஸ்தான் விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் சதாத் பல்வேறு விமானப்படைத் தளங்களுக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கும் விஜயம் செய்யவுள்ளார்.





# துறைமுக ஊழியர்கள் திருமலையில் ஆர்ப்பாட்டம்

திருகோணமலை துறைமுக அஷ்ரப் இறங்குதுறையில் கடந்த மாதம் 12 ஆம் திகதி தொடக்கம் தரித்துநின்று மருத்துவசேவை புரியும் மிதக்கும் மருத்துவமனைக் கப்பலான ஓசன் மொனராத் என்ற கப்பலை உடனடியாக அகற்றவேண்டும் எனக்கோரி இலங்கை துறைமுக அதிகாரசபையின் கீழ் பணியாற்றும் சுமார் 150 ஊழியர்கள் நேற்று போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

இந்தக் கப்பல் தரித்து நிற்பதால் பொருட்களைக் கொண்டு வரும் வேறு கப்பல்கள் இங்கு தரிக்க முடியாத நிலை காணப்படுகிறது. இதன்காரணமாக ஊழியர்களுக்கு மேலதிக நேரக் கொடுப்பனவு கிடைப்பதில்லை. இதனைக் காரணம் காட்டியே இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

நேற்றுக்காலை 9 மணியளவில் ஒன்றுகூடிய தொழிலாளர்கள் இவ்வாறு போராட்டத்தை மேற்கொண்டனர். நுரைச்சோலை அனுமின் நிலையத்துக்குக் கொண்டுவரப்படும் நிலக்கரி இந்த இறங்குதுறையில் இறக்கப்பட்டு புத்தளத்துக்குக் கொண்டுசெல்லப்படுவதால் தொழிலாளர்களுக்கு அதிக நேரம் வேலைகள் கிடைப்பது வழக்கம். ஆனால் ஓசின் மொனராத் என்ற மருத்துவக் கப்பல் தரித்து நிற்பதால் ஒரு மாத காலத்துக்கு மேலாக ஊழியர்களுக்கு மேலதிக நேர வேலைகள் கிடைப்பதில்லை. இதனால் ஆத்திரமுற்றே இந்த வேலைபகிஷ்கரிப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவையாற்றவென கிரேக்க அரசாங்கம் இந்த மருத்துவ சேவையை வழங்க முன்வந்தது. இங்கு நாளொன்றுக்கு 100 நோயாளர்கள் வீதம் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்படுகிறது. திருகோணமலை பொதுவைத்தியசாலையில் வைத்து தெரிவுசெய்யப்படும் நோயாளர்கள் இந்தக் கப்பலுக்கு சிகிச்சைக்காக அழைத்துச் செல்லப்படுகின்றனர். (04)

## முஸ்லிம்...

இருவர் ஓட்டோவை நிறுத்தி சாரதியான இவரை அழைத்துச் சென்றுள்ளனர். ஏனைய இருவரும் தப்பிவந்து வாழைச்சேனை பொலிஸில் இதுகுறித்து புகார் செய்தனர்.

அழைத்துச் செல்லப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்ட ஓட்டோ சாரதியின் சடலம் நேற்றுக்காலை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியை அண்மித்த கிரிமிச்சையில் கண்டெடுக்கப்பட்டது.

ஓட்டோ சாரதி கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து ஓட்டமாவடிப் பிரதேசத்தில் பதற்றநிலை காணப்பட்டாலும் அமைதி நிலவி வருகிறது. வியாபார நிலையங்கள் மற்றும் பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன.

இதேயிடத்தில் சில தினங்களுக்கு முன்னர் ஆயுதக்குழுவொன்றினால் விடுதலைப் புலி போராளியொருவர் சுட்டுக்கொல்லப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## துப்பாக்கிச்...

இந்தச் சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு பொலிஸார் விசார

# உலகவங்கியின் வதிவிடப் பிரதிநிதி நாட்டிலிருந்து வெளியேறவேண்டும்!

## நாடாளுமன்றத்தில் விமல் வீரவன்ஸ

(கொழும்பு)

உலகவங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் – பத்திரிகையிலும் பின்னர் அறிக்கை மூலமும் தெரிவித்த கருத்துக்களை மீளப்பெறாவிடின் அவரை நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நேற்றுக்காலை நாடாளுமன்றம் கூடியபோது உரை நிகழ்த்திய விமல் வீரவன்ச –

கடந்த சில நாட்களுக்கு முன்னர் பத்திரிகை ஒன்றுக்கு உலகவங்கியின் வதிவிடப் பிரதிநிதி அளித்த பேட்டியும் அதன்பின்னர் வெளியிட்ட அறிக்கையும் நாட்டின் இறைமைக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. இவ்விரண்டு கருத்துக்களுக்கும் பாரியளவில் வேறுபாடுகள் இல்லை.

இலங்கைக்குள் செயற்படும் எந்தவொரு அமைப்புக்கும் இவ்வாறான கருத்தைத் தெரிவிக்கும் உரிமையில்லை.

எனவே, பீற்றர் ஹரோல்ட் தனது கருத்தை மீளப்பெறாவிடின் அவரை மீளப்பெறுமாறு உலகவங்கிக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உத்தியோகபூர்வமற்ற நிலை ஒன்றை வழங்குவதற்கு உலகவங்கிப் பிரதிநிதிக்கு என்ன உரிமையுள்ளது.

அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்[டு] பீற்றர் ஹரோல்ட் இந்தக் க[ருத்]தைத் தெரிவித்துள்ளார். ஆனால், யுத்தநிறுத்த ஒப்பந்தமே சட்டரீதியானது அல்ல என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# உலகவங்கிப் பிரதிநிதி விசாரணைக்கு அழைப்பு

வடக்கு – கிழக்கு பிரதேசமானது விடுதலைப் புலிகளால் நிர்வகிக்கப்படும் உத்தியோகபூர்வமற்ற அரச பகுதியென இலங்கைக்கான உலக வங்கிப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் தெரிவித்த கருத்து தொடர்பாக அவரிடமிருந்து உத்தியோகபூர்வமாக விபரங்களைப் பெறுவதற்காக வெளிவிவகார அமைச்சு அலுவலகத்துக்கு அவரை அழைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

வெளிவிவகார அமைச்சின் செ[ய]லாளர் பாலிகாகாரவினால் உல[க] வங்கி பிரதிநிதி பீற்றர் ஹரோல்[ட்] மீது விசாரணைகள் நடத்தப்பட்டு அவரது விளக்கங்கள் பெறப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.


அவரது கருத்து தொடர்பாக உத்தியோக பூர்வமான அரசாங்கத்தின் எதிர்ப்பினை உலக வங்கிப் பிரதிநிதியிடம் தெரி[வி]ப்பதற்கும் இந்த சந்தர்ப்பம் ப[யன்]படுத்தப்படுமென அந்த தகவல்கள் தெரிவித்தன. (தே)

## முஸ்லிம் சாரதி...

கொண்டிருக்கும் வேளையில், இப்படியான தடைகளை ஏற்படுத்தி லாபமடையநினைக்கும்பேரினவாதிகளின் கைங்கரியமே இதுவென்பதில் சந்தேகமில்லை.

முஸ்லிம் மக்கள் தங்கள் வயல்களில் மீண்டும் பயிர்செய்யவும், இரு

லாபமடையக் கூடிய தரப்பு பேரினவாதிகள் மட்டுமே என்பது சிந்திக்கத் தெரிந்த எல்லோருக்கும் புரியும். ஆகவே, அரசியல் தலைவர்கள் – மக்களை பகைமை பாதாளத்துக்குள் தள்ளிவிட முயலவேண்டாமெனக் கேட்டுக்கொள்கிறோம்.



பாகிஸ்தான் விமானப்படை தளபதிக்கு இராணுவத் தலைமை யகத்தில் வரவேற்பு அளிக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்

# ஹரோல்ட்டுக்கு எதிராக கொழும்பில் சுவரொட்டிகள்!

(கொழும்பு)

உலகவங்கியின் இலங்கைக் கான வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட்டுக்கு எதிர்ப்புத்தெரி வித்து கொழும்பு நகரிலும் அதனைச் சுற்றியுள்ள பிரதேசங்களிலும் தேசப்பற்றாளர் இயக்கம் சுவரொட்டி களை ஒட்டியுள்ளது.

தேசாபிமானிகளே புலிப் பயங்கர வாதிகளுக்கு தனியரசு அங்கீகாரம் அளிக்கும் உலக வங்கிப் பிரதிநிதி யின் அறிக்கைக்கெதிராக அணி திரள்வோம். பீற்றர் ஹரோல்ட்டை நாட்டைவிட்டு வெளியேற்று, பீற்றர் ஹரோல்ட் வீட்டிற்குப் போ என்ற வாசகங்கள் சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் சுவரொட்டிகள் ஒட்டப் பட்டுள்ளன. (தே)

## பொதுக் கட்டமைப்பு...

கலந்துரையாடப்பட்டதாகவும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்க ளுக்கான நிவாரண விநியோகங் களை வழங்குவது தொடர்பில் பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்து வது தொடர்பாக எரிக் சொல் ஹெய்ம் நம்பிக்கை கொண்டி ருப்பதாகவும் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

இவற்றைவிட விடுதலைப் புலி களின் விமானப்படை தொடர்பாக இலங்கை அரசின் நிலைப்பாடுகளை சொல்ஹெய்ம் எடுத்து விளக்கி னார். இதன்போது அரசாங்கம் விமான ஓடுபாதை குறித்து தற் போது வெளியிடும் கருத்தில் எந்த வித ஆதாரமும் இல்லையெனவும் இந்த ஓடுபாதை 2002ஆம் ஆண்டு போர்நிறுத்த ஒப்பந்தம் செய்வ தற்கு முதலிருந்தே இருந்து வருவ தாகவும் பாலசிங்கம் சொல் ஹெய்மிடம் தெரிவித்தார்.

போராளியொருவர் சுட்டுக்கொல லப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## துப்பாக்கிச்...

இந்தச் சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு பொலிஸார் விசார ணைகளை மேற்கொண்டு வருகின்ற னர். இவர் ஈ.பி.ஆர்.எல்.எப் வரதர் அணியின் முன்னாள் உறுப்பினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## புலிகளிடமுள்ள...

வரப்பட்டு இங்கு பொருத்தப்பட்டுள் ளன. இவர்களிடமுள்ள விமானங் கள் மூலம் சுமார் 1500 கிலோ நிறையை சுமந்து கொண்டு செல்ல முடியும்.

இதன் மூலம் கொழும்பின் அரை வாசிப்பகுதிகளை அழித்துவிட முடியும் போர்நிறுத்த உடன்பாடு செய்யப்பட்டமை ஆயுதங்களை கொள்வனவு செய்வதற்கு அல்லா மல் சமாதானத்தை ஏற்படுத்துவ தற்காகவே என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்

## புலிகளின்...

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பா ளர் சு.ப.தமிழ்ச்செல்வன், தமிழீழ காவல்துறைப்பொறுப்பாளர் பா.நடே சன், தமிழீழ அரசியற்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி, சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தே வன் மற்றும் உதவியாளர்கள் ஆகி யோர் இந்தக் குழுவில் இடம்பெற் றுள்ளனர்.

மாலை 3 மணியளவில் ஹெலி கொப்டரில் செல்லவிருந்த இவர் கள், சீரற்ற கால நிலை காரணமா கவே 5.45 மணியளவில் புறப்பட்டுச் சென்றனர்.

படியான தடைகளை ஏற்படுத்தி லாபமடைய நினைக்கும் பேரினவாதி களின் கைங்கரியமே இதுவென்ப தில் சந்தேகமில்லை.

முஸ்லிம் மக்கள் தங்கள் வயல் களில் மீண்டும் பயிர்செய்யவும், இரு தரப் பினருக்கும் இடையிலான நல் லுறவு மீண்டும் தழைத்தோங்கவும் உகந்த இந்த நட்புச் சூழலை சீர்கு லைத்து, நச்சுத் சிந்தனையை ஏற் படுத்தி, தன் காரியத்தைச் சாதித் துக்கொள்வதற்கு செய்யப்பட்ட இந்த அப்பட்டமான படுகொலையில் படைத்தரப்பின் கைவேலையும் இருப்பதாகச் சந்தேகிக் கின்றோம்.

முன்னர் நிகழ்ந்த சம்பவங்க ளையும் இந்தச் சம்பவம் நடந்த முறை, இடம், நேரம் போன்றவற்றை யும் ஒப்பிடும்போது அந்தச் சந் தேகம் மேலும் வலுவடைகின்றது. தமிழ்பேசும் சமூகம் இந்த நிகழ்வை மிகக் கவனமாகக் கையாள வேண் டும். அனைவரும் பொறுப்புணர்வு டன் நடந்துகொண்டு குற்றம் இழைத்தவர்களை சரியாக அடை யாளம் கண்டுகொள்ள வேண்டும்.

இந்தத் தருணத்தில் இப்படி யான ஒரு நிகழ்வைச் செய்வதால் வாதிகள் மட்டுமே என்பது சிந்திக் கத் தெரிந்த எல்லோருக்கும் புரி யும். ஆகவே, அரசியல் தலைவர் கள் - மக்களை பகைமை பாதாளத் துக்குள் தள்ளிவிட முயலவேண்டா மெனக் கேட்டுக்கொள்கிறோம்.

ஆன்மீகத் தலைவர்கள் - மக் களுக்கு தகுந்த விளக்கமளித்து, சரியான திசை நோக்கி அவர்களை ஆறுதல்படுத்தவேண்டும் என்று வேண்டுகிறோம். சிக்கல்கள் தொடரு மானால் அதனால் வருந்தப்போ வது அடிமட்ட தொழிலாளர்களும், விவசாயிகளுமே என்பதை அனை வரும் மனதில் கொள்ளவேண்டும். நெஞ்சை உருக்கும் இந்தச் சம் பவத்தில் உயிரிழந்த சகோதரரின் குடும்பத்தினருக்கும், உறவினர்கள், நண்பர்களுக்கும் விடுதலைப் புலி கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரி விக்கின்றனர்.

இந்தப் படுகொலையைச் செய்த வர்களின் கபடநோக்கம் நிறைவேற விடவேண்டாம் என்று மட்டக் களப்பு - அம்பாறைமாவட்ட அரசியற் துறை அனைவரையும் கேட்டுக் கொள்கிறது எனக் குறிப்பிடப்பட் டுள்ளது.

## நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்விலை | விற்பனை விலை |
| --- | --- | --- |
| அமெரிக்க டொலர் | 99.17 | 100.06 |
| ஸ்ரேலிங் பவுண் | 190.84 | 193.22 |
| யூரோ | 131.99 | 133.86 |
| சுவிஸ் பிராங் | 84.85 | 86.60 |
| யென் | 0.9445 | 0.9592 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 10.03.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.